Registered as a Newspaper

08 DEC 1998

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர்:14 வள்ளுவர்ஆண்டு2029கார்த்திகை 21 திங்கட்கிழமை (07-12-1998) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 9

# அனுருத்தவின் வாகன அணி மீது ஒட்டுசுட்டானில் புலிகள் ஷெல் வீச்சு!

## 4 படையினர் பலி; மெய்ப்பாதுகாவலர் உட்பட 42 படையினர் காயம்

கொழும்பு, டிசெம்பர் 7

கடந்த வியாழக்கிழமை படையினரால் கைப்பற்றப்பட்ட ஒட்டுசுட்டான் பகுதிக்கு முப்படைத் தளபதிகள் சகிதம் நேற்று விஜயம் செய்த பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் அனுருத்த ரத்வத்தவின் வாகன அணி மீது நேற்று நண்பகல் 2.00 மணியளவில் விடுதலைப் புலிகள் ஷெல் தாக்குதல் நடத்தினர்.

இத்தாக்குதலில் ஜெனரல் அனுருத்த ரத்வத்த மயிரிழையில் உயிர் தப்பினார். அனுருத்தவின் மெய்ப்பாதுகாவலர்கள் நால்வர் மற்றும் 53 ஆவது படையணி கட்டளை அதிகாரி மேஜர் ஜெனரல் நீல் டயஸ் உட்பட 42 பேர் காயமடைந்தனர். 4 படையினர் உயிரிழந்தனர்.

கடந்த வியாழக்கிழமை படையினரால் விடுவிக்கப்பட்ட ஒட்டுசுட்டான் பகுதியைப் பார்வையிடுவதற்காக பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்த நேற்றுக் காலை அங்கு சென்றார்.

கொழும்பிலிருந்து விமான மூலம் அநுராதபுரத்துக்குச் சென்ற அவர் அங்கிருந்து ஹெலி மூலம் நெடுங்கேணி முகாமுக்குச் சென்றார்.

அங்கிருந்து வாகன அணி

(10ஆம் பக்கம் பார்க்க)



## குண்டுத் தாக்குதல்களுக்கு நான் அஞ்சப்போவதில்லை

### அனுருத்த கூறுகிறார்

கொழும்பு, டிசெ. 7

''ஒட்டுசுட்டானில் நடந்ததுபோன்ற குண்டுத் தாக்குதல்களுக்கு நான் அஞ்சப்போவதில்லை. வவுனியா — யாழ். நெடுஞ்சாலை திறக்கும் இராணுவ நடவடிக்கையைத் தொடர்ந்து மேற்கொள்வேன்''

இப்படி பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் அனுருத்த ரத்வத்த தெரிவித்தார்.

ஒட்டுசுட்டான் தாக்குதலையடுத்து நெடுங்கேணியில்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## வல்வை வாசிகள் உட்பட நால்வர் ஷெல்லில் காயம்

வவுனியா, டிசெ. 7

முத்தையன்கட்டு, கற்சிலைமடுப் பகுதிகள் மீது நேற்று நடத்தப்பட்ட ஷெல் தாக்குதல்களில் வல்வை வாசிகள் இருவர் உட்பட நான்கு பொதுமக்கள் காயமடைந்து புதுக்குடியிருப்பு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என்று வவுனியாவுக்கு கிடைத்த தகவல்கள் தெரிவிக்கின்றன.

இளையதம்பி மயில்வாகனம் (50 வயது — கற்சிலைமடு), பேரம்பலம் மகாலிங்கம் (48 வயது — கற்சிலைமடு), தர்மலிங்கம் றஞ்சன்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## 120 மி. மீ. ஷெல்களே புலிகளால் ஏவப்பட்டன

கொழும்பு, டிசெ. 7

ஒட்டுசுட்டான் தான்தோன்றீஸ்வரர் ஆலயப் பகுதியில் பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் அனுருத்தரத்வத்த வாகனத்தில் ஏறச்சென்ற சமயம் வீழ்ந்து வெடித்த ஷெல்கள் 120 மி. மீற்றர் ஷெல்களே என்று பாதுகாப்பு அதிகாரிகள் தெரிவித்தனர்.

அமைச்சரின் கவச வாகனத்தில் அவர் ஏறச்சென்ற சம

(10 ஆம் பக்கம் பார்க்க)

## பல்வேறு சம்பவங்களில் ஆறு புலிகள் மரணம்

வவுனியா, டிசெ. 7

வன்னிப் பகுதியில் கடந்த சில நாள்களில் ஏற்பட்ட மோதல் மற்றும் வெடிவிபத்துச் சம்பவங்களில் 6 விடுதலைப் புலிகள் உறுப்பினர்கள் மரணமடைந்துள்ளனர் என்று வவுனியா செய்திகள் தெரிவிக்கின்றன.

கடந்த வெள்ளிக்கிழமை ஒட்டுசுட்டான் பகுதியில் ஏற்பட்ட மோதலில் மாயவன் அல்லது சஞ்சயன் (துரைராசசிங்கம் சந்திரசேகரன் — மட்டக்களப்பு), சீந்தமிழ் (ஈஸ்வரானந்தம் விமலா — யாழ்ப்பாணம்) ஆகியோரும் —

அன்றைய தினம் அம்பகா

(10 ஆம் பக்கம் பார்க்க)

## பத்திரிகையாளர் குழு இடைவழியில் திரும்பியது

கொழும்பு, டிசெ. 7

ஒட்டுசுட்டான் பகுதி நிலைமைகளைக் காட்டுவதற்காக கொழும்பில் இருந்து அழைத்துச் செல்லப்பட்ட 26 பத்திரிகையாளர்களும் அரைவழியில் திருப்பி அனுப்பப்பட்டனர்.

சர்வதேச செய்தி நிறுவனங்களைச் சேர்ந்த பத்திரிகையாளர்களும், கொழும்பு தமிழ்ப்பத்திரிகையாளர்களும், தொலைக்காட்சிப் படப்பிடிப்பாளர்களுமாக 26 பேர்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளுக்கு எதிரான போரைத்தொடர கூட்டுப்படைகளைகொண்ட ஐவர்குழு

### அடுத்த ராணுவத்தளபதி சிறிலால் வீரசூரிய

கொழும்பு, டிசெ. 7

விடுதலைப் புலிகளுக்கு எதிரான இராணுவ நடவடிக்கையைத் தொடர கூட்டுப் படைகளைக் கொண்ட குழு ஒன்று நியமிக்கப்படவுள்ளது. இதில் சுமார் ஐந்து பேர் அங்கம் வகிப்பார்கள் என இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன.

அதேவேளை — வெற்றி உறுதி படை நடவடிக்கைக்கு தலைமை வகித்து செயற்பட்ட மேஜர் ஜெனரல் சிறிலால் வீரசூரிய எதிர்வரும் 15 ஆம் திகதி முதல் இராணுவத் தளபதியாக நியமிக்கப்படவுள்ளார் என்றும் —

அதனை அடுத்து இராணுவ உயர் பதவிகளில் மாற்றங்கள்

(10 ஆம் பக்கம் பார்க்க)

### வன்னிப் போர் முனையில்

## அனுருத்தவுக்கு ஏற்பட்ட 2ஆவது பயங்கர அனுபவம்

கொழும்பு, டிசெ. 7

பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் அனுருத்த ரத்வத்தவுக்கு வன்னிப்போர் முனையில் ஏற்பட்ட இரண்டாவது பயங்கர அனுபவம் நேற்றைய ஒட்டுசுட்டான் தாக்குதல் சம்பவம் என்று அரசியல் விமர்சகர்கள் தெரிவித்தனர்.

1996 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 7 ஆம் திகதி

(10 ஆம் பக்கம் பார்க்க)

## ஈ.பி.டி.பி. தவிர்ந்த ஏனைய தமிழ் கட்சி உறுப்பினர் தீவுப்பகுதி செல்லத் தடை

### புளொட் உறுப்பினர் திருப்பி அனுப்பிவைப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 7

ஈ. பி. டி. பி. தவிர்ந்த ஏனைய தமிழ்க் கட்சிகளின் உறுப்பினர்கள் தீவுப்பகுதிக்கு செல்வதற்கு கடற்படையினர் தடை விதித்துள்ளனர் என தெரிவிக்கப்பட்டது.

தீவுப்பகுதிக்குச் செல்வதற்காக யாழ்ப்பாணத்தில் இருந்து நேற்றுச் சென்ற புளொட் அமைப்பின் உறுப்பினர்கள் அல்லைப்பிட்டிக்கு அப்பால் செல்ல அனுமதிக்கப்படவில்லை.

''ஈ. பி. டி. பி. அமைப்பைத் தவிர்ந்த ஏனையகட்சி உறுப்பினர்கள் தீவுப்பகுதி செல்வதற்கு அனுமதிக்க வேண்டாம்'' என்று மேலிடத்தில் இருந்து பணிப்புரை

(10 ஆம் பக்கம் பார்க்க)

## ஒட்டுசுட்டான் மீது புலிகள் தொடர்ந்து ஷெல் தாக்கு

கொழும்பு, டிசெ. 7

ஒட்டுசுட்டான் நகரில் நிலைகொண்டுள்ள படையினர் மீது விடுதலைப் புலிகள் மோட்டார் மற்றும் பீரங்கித் தாக்குதல்களை தொடர்ந்து நடத்துவதாக பாதுகாப்புஅமைச்சு நடவடிக்கைத் தலைமையகம் தெரிவித்தது.

இத்தாக்குதல்களில் மூன்று படையினர் காயமடைந்தனர் என்றும் —

படையினர் பலத்த எதிர்ப்புக்கு முகம் கொடுக்க வேண்டியுள்ளது என்றும் — மேலும்

(10 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# மரண அறிவித்தல்கள்

## தருமலிங்கம் உருத்திரலிங்கம்
(நயினாதீவு)

நயினாதீவு 7 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்தவரும் திருநெல்வேலியில் வசித்தவருமான தருமலிங்கம் உருத்திரலிங்கம் 98 - 12 - 06ஆம் திகதி காலமானார்.

இவர் தருமலிங்கம் — செல்லமுத்து தம்பதிகளின் மகனும், கோபாலபிள்ளை — பாக்கியலெட்சுமியின் மருமகனும், திரிபுராம்பாளின் (பலாலி ஆசிரியர் கலாசாலை) அன்புக் கணவரும், நாகதர்சினி, உசாலினி, திரிபுரகஜன் ஆகியோரின் தந்தையாரும், நீலாம்பாள், சண்முகலிங்கம், சரோஜினிதேவி, மாணிக்கபூபதி, சிவயோகலிங்கம், கோபாலலிங்கம், சகுந்தலாதேவி, கணேசலிங்கம், உமாகரலிங்கம், நடேசலிங்கம் ஆகியோரின் சகோதரரும், வாமதாசன், வல்லிபுரம், உருத்திராம்பாள், அம்பிகைபாலன், சிவகடாட்சம், ஜெகதாம்பாள் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (98-12-07) நயினாதீவில் நடைபெறும்.

தகவல்;
**உ. திரிபுராம்பாள்**
(மனைவி)

(61153)

## திருமதி பொன்னுத்துரை செல்லம்மா

சங்கத்தானையைப் பிறப்பிடமாகக் கொண்ட பொன்னுத்துரை செல்லம்மா 05 - 12 - 98 இல் காலமானார்.

இவர் காலஞ்சென்ற பொன்னுத்துரையின் (ஆயுர்வேத வைத்தியர்) அன்பு மனைவியும் காலஞ்சென்ற கார்த்திகேசு சுப்பிரமணியம் (R.M.P.), திருமதி சின்னத்தம்பி சரஸ்வதி (ஓய்வுபெற்ற ஆசிரியர்), திருமதி வைத்தியலிங்கம் தங்கம்மா (ஓய்வுபெற்ற ஆசிரியர்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற செல்லக்கண்டு, சிவநாதன் (கனடா), சிவமங்கை (சாவ. ப. நோ. கூ. சங்கம்) ஆகியோரின் அன்புத் தாயாரும் சுப்பிரமணியம், கமலாதேவி (கனடா), இராமநாதன் ஆகியோரின் அன்பு மாமியாரும், லக்சனா, பிரசாந்த் ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் 6-12-98 அன்று பிற்பகல் 2 மணிக்கு கண்ணாடிப்பிட்டி மயானத்தில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

தகவல்:
**வே. இராமநாதன்**
(மருமகன்)

சங்கத்தானை,
சாவகச்சேரி.
(சி/5731)

## சுப்பிரமணியம் தம்பிராஜா
(ஓய்வு பெற்ற பொலீஸ் உத்தியோகத்தர்)

இருபாலையைப் பிறப்பிடமாகவும் மல்லாகத்தை வசிப்பிடமாகவும் இருபாலையைத் தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட தம்பிராஜா 06-12-98இல் காலமானார்.

இவர் காலஞ்சென்ற சுப்பிரமணியம் முத்தம்மா தம்பதிகளின் அன்பு மகனும், நாகரத்தினம் அருளம்மா தம்பதிகளின் மருமகனும், நீலாதேவியின் அன்புக் கணவரும், தயாளினி (கனடா), பிறேமளினி, ஜெயாளினி (கனடா), கேமளினி, தேவலினி, பிரதீபன் ஆகியோரின் அன்புத்தந்தையும், தயானந்தன் (பொறியியலாளர், கனடா), தயாபரன் (இத்தாலி), கஜேந்திரன் (கனடா) ஆகியோரின் அன்புமாமனாரும், காலஞ்சென்றவர்களான செல்வரத்தினம், நடராஜா, தவராஜா ஆகியோரின் சகோதரனும், ஜீர்த்தனா, ஜீவனா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
**மனைவி, பிள்ளைகள்.**

இருபாலை, கிழக்கு.
கோப்பாய்.
(61157)

## திருமதி ராணி ஜெக்சோதி
(ஆசிரியை, சென். ஜோசப் கல்லூரி, திருகோணமலை)

திருமதி ராணி ஜெகசோதி 05-12-98 அன்று திருகோணமலையில் காலமானார்.

அன்னார் ஆறுமுகம் ஜெகசோதி (சட்டத்தரணி திருகோணமலை) அவர்களின் அன்பு மனைவியும், த. சிவபாக்கியன் நல்லம்மா தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரியும், மதன் (மருத்துவ பீடம், கொழும்பு), பிரதீஸ் (சென் ஜோசப் கல்லூரி), அமிர்தாப் (சென் ஜோசப் கல்லூரி), சிந்தனா ஆகியோரின் அன்புத் தாயாரும், சிவநாதன் (யாழ் மாநகர சபை ஊழியர்), மீரா அருள்நேசன் (ஆசிரியை, யாழ். இந்துக் கல்லூரி), சிவமோகன் (கிராம உத்தியோகத்தர்), சிவயோகன் (யாழ். போதனா வைத்தியசாலை தாதி உத்தியோகத்தர்), சியாமாயஸ்ரஸ் (ஆசிரியை, கரம்பன் சண்முகானந்தா வித்தியாசாலை, ஊர்காவற்றுறை), சிவரூபன் (பொறியியலாளர், இங்கிலாந்து), சிவவாசன் (பிரான்ஸ்), சிவகாந்தன் (லண்டன்), ரஜனி ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 06-12-98 அன்று திருகோணமலை இந்து மயானத்தில் நடைபெற்றன என்பதை அறியத் தருகின்றேன்.

தகவல்:
**அருள்நேசன்**
(மைத்துனர்)

ஆசிர்வாதப்பர் வீதி,
அரியாலை மேற்கு,
யாழ்ப்பாணம்.
(61155)

## அணை அமைக்க நிதி

நெடுந்தீவு, டிசெ. 7

நெடுந்தீவு தெற்குப் பகுதியில் கடல் நீர் புகும் கால்வாய்களில் ஐந்து கால்வாய்க் கரைகளில் தடுப்பு அணை கட்டுவதற்கு ஐ. நா. அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் ஐந்து லட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இந்த நிதியைக் கொண்டு நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் தனது நேரடி மேற்பார்வையில் இத்திட்டப் பணிகளை மேற்கொள்கிறார்.

(ஐ-111)

## அம்பனில் தேடுதல்

செம்பியன்பற்று, டிசெ. 7

வடமராட்சி கிழக்கு அம்பன், ராஜன்நகர்ப் பகுதிகள் நேற்று சுற்றிவளைக்கப்பட்டுத் தேடுதல் நடத்தப்பட்டது.

இதனை அடுத்து நாகர் கோயில் வீதி ஊடாகப் பருத்தித்துறைக்குச் செல்வது காலை 8-30 மணியிலிருந்து 12-30 வரை தடை செய்யப்பட்டிருந்தது. பின்னர் நிலைமை வழமைக்குத் திரும்பியது.

(இ-36)

**நாகம்ஸ்**
சினிமா
சுன்னாகம்.
இன்று முதல்
30 அடி அகலத் திரையில்
**சரத்குமார், குஷ்பு**
நடித்த
**சிம்மராசி**
(புதிய வெளியீடு)
காட்சிகள்- 10.30-2.30
11 ஆம் திகதி முதல்
மீண்டும் கூட்டுத்தாபன
ரீல்ஸ் வெளியீடு!
குதூகல ஆரம்பம்
**காதல் கோட்டை**
(சி/5735)

**ராஜா டாக்கீஸ்**
யாழ்ப்பாணம்.
**ரஜனி, மீனா, ரோஜா**
**ஜனகராஜ், செந்தில்**
நடித்த
**வீரா**
தினசரி
10-30, 2-00, 5-00
(சி/5711)

**லிபேட்டி**
தியேட்டர்
அச்சுவேலி.
**லிவிங்ஸ்டன் - கௌசல்யா**
நடித்த
**சொல்லாமலே**
(புதிய வெளியீடு)
அடுத்த வெளியீடு!
சிம்மராசி
தினசரி: 10-30, 2-30
(பழைய நேரம்)
தொலைபேசி:
**070 - 212223**
(61071)

**நீர்வேலியில்**
**விற்பனையாகிறது!**
**மிட்சுயி சிமெந்து**
ரூபா 520/-
**திரு. கணேசலிங்கம்**
**யாழ். பருத்தித்துறை வீதி,**
(அத்தியார்
இந்துக்கல்லூரி முன்பாக)
(சி/5733)

## சட்டப்படி வேலை:
# வெளிநாட்டு விமானங்கள் தாமதமாக புறப்பட்டன

கொழும்பு, டிசெ. 7

கட்டுநாயக்க விமானநிலையத்தில் கடந்த வியாழக் கிழமை இரவு உணவு விநியோக ஊழியர்கள் மேற்கொண்ட சட்டப்படி வேலை போராட்டத்தால் விமானங்கள் தாமதமாகவே புறப்பட்டன.

இந்தப் போராட்டம் காரணமாக வெளிநாடுகளுக்கான விமானங்கள் தாமதமாகவே புறப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது.

சில விமானங்கள் உணவு பெறுவதை தற்காலிகமாக நிறுத்தியுள்ளன.

(இ-3)

**BARATHY**
சித்தன்கேணி.
ஆண்டு 6 முதல் 11 வரை

| | |
|---|---|
| விஞ்ஞானம்: | திரு. தேவா |
| கணிதம்: | திரு S. சிவரூபன், நடா |
| தமிழ்: | திரு. சின்னத்தம்பி, ரஞ்சன் |
| வரலாறு - சமூகக்கல்வி | திரு.K.S.முத்துலிங்கம், சிவா |
| ஆங்கிலம்: | திரு வாகீசர், அருமைநாயகம் |
| வர்த்தகம்: | திரு. லோகேஸ்வரன் |

புதிய வகுப்புக்கள் ஆரம்பம்: 10 - 12 - 98
வியாழன் 3-00 மணி.
குறிப்பு; மேற்குறிப்பிட்ட ஆசிரியர்கள் சித்தன்கேணியில் எமது நிறுவனத்தில் மட்டுமே கற்பிப்பார்கள்.
(61164)

## கண்ணீர் அஞ்சலி

பலாலி ஆசிரிய கலாசாலை
2 ஆம் வருட வர்த்தக நெறியைச் சேர்ந்த
திருமதி உருத்திரலிங்கம் திரிபுராம்பாள்
அவர்களின் அன்புக் கணவர்

**தருமலிங்கம் உருத்திரலிங்கம்**
அவர்கள் (நயினாதீவு)

நேற்றுக் காலமாகிவிட்டார். அன்னாருக்கு எமது கண்ணீர் அஞ்சலியைத் தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

**அதிபர், விரிவுரையாளர், ஆசிரிய மாணவர்கள்,**
பலாலி ஆசிரிய கலாசாலை
திருநெல்வேலி.
(61161)

## கண்ணீர் அஞ்சலி

மீரா ஆசிரியரின் அன்புச் சகோதரி

**திருமதி ஜெகஜோதி** (ஆசிரியை)

அவர்களின் மறைவையொட்டி எமது அஞ்சலியைத் தெரிவிப்பதுடன் அவரின் மறைவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**இயக்குநர், ஆசிரியர்கள், மாணவர்கள்,**
பொருளியற் கல்லூரி,
நாவலர் றோட், யாழ்ப்பாணம்.
(61163)

# மரண அறிவித்தல்

## சபாபதிப்பிள்ளை குமாரசுவாமி

யாழ்ப்பாணம், அத்தியடி, புது வீதி, இலக்கம் 70ஐப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட சபாபதிப்பிள்ளை குமாரசுவாமி நேற்று 06-12-98 இல் காலமானார்.

இவர் பரமேஸ்வரியின் (லண்டன்) அன்புக் கணவரும், கணேஸ்வரன் (லண்டன்), காலஞ்சென்ற திருமதி விஜயவாணி, திருமதி விஜயலக்ஷ்மி (லண்டன்), அன்புத் தகப்பனாரும் அரவிந்தை (லண்டன்), பிரேம்நாத் (கொழும்பு), கேதீஸ்வரன் (லண்டன்) ஆகியோரின் மாமனாரும், ஹரிஸ்கோவிந்தின் பேரனாரும், காலஞ்சென்ற திரு. திருமதி சபாபதிப்பிள்ளையின் மகனும் திரு. திருமதி கந்தையாவின் மருமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று திங்கட்கிழமை (07-12-98) மு. ப. 11 மணியளவில் 66, புது வீதி, அத்தியடியில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக வில்லூன்றி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றார்கள்.

தகவல்
**மு. தனபாலசிங்கம்**
(மைத்துனர்)

66, அத்தியடி புது வீதி,
யாழ்ப்பாணம்.
(61162)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## லொக்கர்பி விவகாரம்

# ஐ.நா. செயலர் லிபிய விஜயம்!

ரியூனீசியா, டிசெ. 7

1988ஆம் ஆண்டு இடம்பெற்ற லொக்கர்பி விமானக் குண்டு வெடிப்புச் சம்பவம் தொடர்பான சந்தேக நபர்களை விசாரணைக்காக ஒப்படைக்கும் விவகாரம் பற்றி லிபிய அதிபர் கேணல் முஹமர் கடாபியுடன் நேரில் பேச்சு நடத்துவதற்காக ஐ. நா. செயலாளர் நாயகம் கோபி அனான் திரிப்போலி சென்றடைந்துள்ளார்.

10 ஆண்டு காலமாக இழுபறிப் பட்டு வரும் இந்த விவகாரத்துக்கு இணக்கமானதீர்வு ஒன்றை எட்டும் முயற்சியாக ஐ நா. செயலர் தனிப்பட்ட முறையில் அங்கு விஜயம் செய்கிறார்

1988 ஆம் ஆண்டு ஸ்கொட்லாந்தின் லொக்கர்பி என்ற இடத்துக்கு மேலாகப் பறந்து கொண்டிருந்த 'பானம் —103' என்ற பிரிட்டிஷ் விமானத்தில் இடம்பெற்ற குண்டு வெடிப்பில் 270 பயணிகள் — பெரும்பாலானோர் அமெரிக்கர் — பலியாகினர்.

மிகக் கடுமையானதாக இருப்பினும் இந்த முயற்சியில் வெற்றி கிட்டும் எனத் தாம் நம்புவதாக கோபி அனான் தெரிவித்துள்ளார்.

''கேணல் கடாபியுடனான சந்திப்பு பரபரப்பான, சுவையான ஒரு சந்திப்பாக இருக்கும்'' என்றும்கூறினார்.

சூட் நகரில் கடாபியுடனான அவரது சந்திப்புக் குறித்து இச்செய்தி அச்சுக்குப் போகும் வரை தகவல் கிடைக்கவில்லை.

(ஐ)

## லிபிய விமானத்தில் செல்லவே அனுமதி

திரிப்போலி, டிசெ. 7

ஐ. நா. செயலாளர் நாயகத்தை ஏற்றிச் சென்ற விமானம் திரிப்போலியில் தரையிறக்கப்பட்டு அங்கு வைத்து லிபிய பயணிகள் ஜெற் விமானம் ஒன்றுக்கு அவரும் அவரது குழுவினரும் மாற்றப்பட்டனர். செய்தியாளர்கள் எவரும் அந்த விமானத்தில் செல்ல அனுமதிக்கப்படவில்லை.

பின்னர் அங்கிருந்து அந்த ஜெற் விமானம் 400 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள சூட் என்ற நகரத்துக்குச் சென்றது.

பயண ஏற்பாட்டில் இந்த மாற்றத்தை லிபிய அதிகாரிகள் திடீரென்றே மேற்கொண்டனர்.

முதலில் செய்யப்பட்ட ஏற்பாடுகளின்படி கோபி அனான் ரியூனீசியாவில் இருந்து விமானம் மூலம் நேரடியாகவே லிபியாவின் சூட் நகருக்குச் செல்வதாக இருந்தது.

(ஐ)

## கடத்தப்பட இருந்த 1,200 பாம்புகள் மீட்பு

ஜகார்த்தா, டிசெ.7

ஆயிரத்து 200 நச்சுப்பாம்புகளை உயிருடன் கடத்திச் செல்ல எடுக்கப்பட்ட முயற்சியை இந்தோனேசிய சுங்க அதிகாரிகள் முறியடித்து விட்டனர்.

ஜகார்த்தா விமான நிலையத்தில் இருந்து சீனா செல்ல இருந்த சிங்கப்பூர் விமானம் ஒன்றில் அவை கடத்தப்பட இருந்தன

60 ஆயிரம் டொலர்கள் மதிப்புள்ள இப் பாம்புகள் பிளாஸ்ரிக் பைகளில் அடைக்கப்பட்டு அவற்றின் மீது 'ஏற்றுமதிக்கான நன்னீர் வாழ் ஆமைகள்' என முத்திரை குத்தப்பட்டிருந்ததாக சுங்க அதிகாரிகள் தெரிவித்தனர்.

இவற்றில் பெரும்பாலானவை நாகபாம்புகள் ஆகும். சீனாவில் பாம்புகள் சுவை மிகுந்த உணவாக உள்ளன.

(ஐ)

## மிருகக் காட்சிச் சாலையில்

# சிறுவனை சிறுத்தை தாக்கிக் கொன்றது!

பாரிஸ், டிசெ. 7

பிரான்ஸில் மிருகக் காட்சிச் சாலை ஒன்றில் கூண்டில் இருந்து தப்பி வெளியேறிய சிறுத்தை சிறுவன் ஒருவனைத் தாக்கிக் கொன்றுள்ளது.

தன் பெற்றோருடன் மிருகக் காட்சிச் சாலைக்கு வந்திருந்த மூன்று வயதுச் சிறுவன் ஒருவனே சிறுத்தையின் தாக்குதலுக்கு இலக்காகி உயிரிழந்தான்.

கூண்டுக்கு அடியே துவாரம் ஒன்றைத் தோண்டி அதன் வழியாக இரண்டு சிறுத்தைகள் தப்பிச் சென்றதாகவும்—

அவற்றில் ஒரு சிறுத்தையே பார்வையாளர் கூட்டத்தில் நின்றிருந்த சிறுவனைத் தாக்கியதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

பலத்த காயமடைந்த சிறுவன் அம்புலன்ஸ் வண்டி வருவதற்கு முன்னரே உயிரிழந்தான்.

(ஐ)

## காஷ்மீர் நெருக்கடியில் மத்தியஸ்தம்

# வகிக்க அதிபர் கிளின்ரன் மறுப்பு!

### ஷெரீப்பின் கோரிக்கை நிராகரிப்பு

வாஷிங்ரன், டிசெ. 7

காஷ்மீர் நெருக்கடியில் தலையிடுமாறு பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரீப் விடுத்த கோரிக்கையை அமெரிக்க ஜனாதிபதி பில் கிளின்ரன் திட்டவட்டமாக நிராகரித்திருப்பதன் மூலம் அந்த நெருக்கடியைச் சர்வதேசமயப்படுத்தி மூன்றாந் தரப்பைச் சம்பந்தப்படுத்த பாகிஸ்தான் மேற்கொண்டு வரும் பிரயத்தனங்களுக்குப் பெரும் பின்னடைவு ஏற்பட்டிருக்கிறது.

காஷ்மீர் நெருக்கடியில் மூன்றாந் தரப்பினர் தலையீடு செய்வது என்ற கேள்விக்கே இடமில்லையென்று இந்தியா மீண்டும் வெளிப்படையாகவே தெரிவித்திருப்பதையடுத்தே இது விடயத்தில் தனது நிலைப்பாட்டை கிளின்ரன் தெளிவுபடுத்தியிருக்கிறார்.

காஷ்மீர் நெருக்கடியில் சம்பந்தப்பட்ட இரு தரப்பினரும் வரவேற்றால்தான் வாஷிங்ரன் தலையீடு செய்ய முடியும் என்று வெள்ளை மாளிகையில் கடந்த வாரம் நடத்திய பேச்சு வார்த்தைகளின் போது நவாஸ் ஷெரீப்பிடம் கிளின்ரன் தெரிவித்து விட்டார்.

இரு தரப்பினரும் வரவேற்றால்தான் மத்தியஸ்தம் என்ற வேலையை நான் செய்வேன். அதுவே எப்போதும் எனது நிலைப்பாடாக இருந்து வந்துள்ளது. மத்திய கிழக்கு மற்றும் வட அயர்லாந்து நெருக்கடிகளில் மத்தியஸ்தம் வகிக்கக் கிடைத்த வாய்ப்புக்களை நான் பெற்றிருக்கின்றேன். அமெரிக்கா சம்பந்தப்பட வேண்டும் என்று சர்ச்சையில் சம்பந்தப்பட்ட தரப்பினர் விரும்பினால்தான் அதனால் பலனுண்டு. அல்லாவிட்டால் மத்தியஸ்தத்தில் அர்த்தமில்லை என்று கிளின்ரன் கடந்த வியாழக்கிழமை வெள்ளை மாளிகையில் நவாஸ் ஷெரீப் முன்னிலையிலேயே பத்திரிகையாளர்களிடம் தெரிவித்தார்.

இரு தரப்பினரிடம் இருந்தும் அழைப்பு விடுக்கப்படாத பட்சத்தில் இருதரப்புச் சர்ச்சைகளில் தலையீடு செய்வதில்லை என்ற அமெரிக்க நிலைப்பாட்டையே ஜனாதிபதி மீள் வலியுறுத்தியிருப்பதாகக் கிளின்ரன் நிர்வாக சிரேஷ்ட அதிகாரிகள் தெரிவித்தனர்.

(ஐ-10)

## உலக அரங்கில்

## சுஹார்ட்டோவுக்கு வீட்டுக்காவல்?

ஜகார்த்தா, டிசெ. 7

இந்தோனேஷியாவின் முன்னாள் ஜனாதிபதி சுஹார்ட்டோ அவரது சொத்துக் குறித்து விசாரணை நடக்கும் காலத்தில் வீட்டுக் காவலில் வைக்கப்படலாம் என இந்தோனேஷிய அரசின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் குறிப்பிட்டார்.

சுஹார்ட்டோ தனது 32 வருட ஆட்சியில் வருமானத்திற்கு அதிகமான அளவில் சொத்து சேர்த்தார் என்ற குற்றச்சாட்டை விசாரணை செய்யும் சட்டமா அதிபர் இது குறித்து இறுதி முடிவு எடுப்பார் என அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார்.

அடுத்த கிழமையளவில் சுஹார்ட்டோவும் அவரது முன்னாள் அமைச்சர்களும் விசாரணைக்காக அழைக்கப்படலாம் எனத் தெரிய வருகின்றது.

(ஐ-10)

## 2 லட்சத்து 40 ஆயிரம் பேர் வெளியேற்றம்

பொகோடா, டிசெ. 7

கொலம்பியாவில் இடம்பெற்று வரும் உள்நாட்டு யுத்தம் காரணமாக இவ்வாண்டில் 2 லட்சத்து 40 ஆயிரம் பேர் வெளியேறியுள்ளனர்.

கடந்த 15 வருடங்களாக இங்கு வலதுசாரி அரச படைகளுக்கும் இடதுசாரி கெரில்லாக்களுக்கும் இடையில் இடம்பெற்று வரும் மோதல்களால் மிகக் கூடுதல் எண்ணிக்கையிலான மக்கள் நாட்டை விட்டு வெளியேறி உள்ளனர்.

இதேவேளை—

தலைநகர் பொகோடாவை தாக்குவதற்கு இடதுசாரிக் கெரில்லா இயக்கங்கள் இரண்டு கூட்டாகச் சேர்ந்து தீட்டிய பாரிய திட்டத்தை தாங்கள் கண்டுபிடித்து விட்டதாக [illegible] அறிவித்துள்ளனர்.

(ஐ-10-ரீ)

## பிரதமர் வாஜ்பாய் காஷ்மீர் விஜயம்!

ஜம்மு, டிசெ. 7

இந்தியப் பிரதமர் அடல் பிகாரி வாஜ்பாய் நேற்று காஷ்மீர் மாநிலத்துக்கு விஜயம் செய்தார்.

பதவியேற்று 8 மாதங்கள் கழிந்த பின்னர் அவர் இந்த மாநிலத்துக்கு மேற்கொள்ளும் முதல் விஜயம் இதுவாகும்.

71 வயதான வாஜ்பாய் விமானப்படை விமானம் மூலம் ஸ்ரீநகருக்கு சென்றார். அங்கிருந்து அவர் இந்திய பாகிஸ்தான் எல்லைகளுக்கு சென்று பார்வையிட்டனர்.

இதேவேளை —

அவர் காஷ்மீரில் இரண்டு தினங்கள் தங்கியிருந்து மாநிலத்தின் பல பகுதிகளுக்கும் விஜயம் செய்யவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தியாவும் பாகிஸ்தானும் அணுகுண்டுப் பரிசோதனைகளை நிகழ்த்திய பின்னர் இந்தியப் பிரதமர் எல்லைப் பகுதிக்கு விஜயம் செய்திருப்பது குறிப்பிடத்தக்கது.

## 'பயர்' திரைப்படம் மீண்டும் தணிக்கைக்கு!

### இந்திய அரசு உத்தரவு

புதுடில்லி, டிசெ. 7

இந்தியாவில் பெரும் சர்ச்சையைக் கிளப்பிய 'பயர்' திரைப்படத்தை திரையிடுவதை அரசாங்கம் தடை செய்துள்ளது. அத் திரைப்படம் நாட்டின் தணிக்கைத் துறையினரால் மீண்டும் தணிக்கை செய்யப்பட வேண்டும் என்று அது உத்தரவிட்டுள்ளது.

பெண்களுக்கு இடையேயான தன்னினச் சேர்க்கையை அடிப்படையாகக் கொண்ட இத் திரைப்படம் வலதுசாரி இந்து அடிப்படைவாதக் கட்சியான சிவசேனையின் கடும் எதிர்ப்புக்கு இலக்கானது.

இந்து மதப் பண்பாடுகளுக்கு எதிரானது, நெறிமுறைகளுக்கு மாறானது என்று சிவசேனைக் கட்சி வாதிட்டு வருகிறது.

ஆனால் சிவசேனையின் நடவடிக்கைகள் தங்கள் கருத்துச் சுதந்திரம் மீதான தாக்குதல் போன்று இருப்பதாக திரைப்படத் தயாரிப்பாளர்கள் கூறியுள்ளனர்.

மற்றொரு செய்தி இதன் கீழே கட்டம் கட்டி வெளியாகியுள்ளது.

(ஐ)

## இந்தியாவில் சர்ச்சை கிளப்பும் திரைப்படம்

### எதிர்த்தும் ஆதரித்தும் குரல்

புதுடில்லி, டிசெ. 7

இந்தியாவில் தற்போது திரையிடப்பட்டுள்ள 'பயர்' (Fire) என்ற திரைப்படம் பெரும்சர்ச்சையைக் கிளப்பியுள்ளது.

தன்னினச்சேர்க்கைத் தொடர்புடைய இரு பெண்கள் தொடர்பான இத் திரைப்படம் 14 சர்வதேச விருதுகளைப் பெற்றுள்ளது.

இத் திரைப்படம் கடந்த வாரம் டில்லியிலும், மும்பாயிலும் திரையிடப்பட்ட போது இந்து அடிப்படைவாத சிவசேனைத் தொண்டர்கள் கடும் எதிர்ப்புத் தெரிவித்தனர்.

இத்திரைப்படத்தைத் திரையிட்ட டில்லி 'றீகல்' படமாளிகை மீது சிவசேனைத் தொண்டர்கள் எனக் கூறப்படும் கும்பல்கள் தாக்குதல் நடத்தினர். இத் திரைப்படம் குறித்து புதுடில்லி சட்டப் பேரவையிலும் கடும் விவாதம் இடம்பெற்றது.

இதேவேளை—

சர்வதேச ரீதியில் விருது பெற்ற இத்திரைப் படத்தை இந்தியாவில் திரையிடுவதற்கு ஆதரவாகவும் குரல் எழுப்பப்பட்டு வருகிறது.

சட்டப்பேரவை நியமன உறுப்பினரான சபானா அஸ்மி இத் திரைப்படத்தில் நடித்துள்ளார். திருமண வாழ்வு மூலம் மகிழ்ச்சிகாண முடியாமற்போன இரு பெண்களில் ஒருவராக இவர் இப் படத்தில் நடித்துள்ளார்.

இத்திரைப்படம் தொடர்பான விவாதம் சபையில் நடைபெற்றபோது அஸ்மியும் அங்கு சமுகமளித்திருந்தார்.

இதேவேளை கடந்த வெள்ளியன்று மும்பாயில் கூடிய திரைப்பட நடிகர்கள் இத் திரைப்படத்துக்கு ஆதரவாகக் குரல் எழுப்பியுள்ளனர்.

(ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## தவறிவிட்டது

வேணுகா நடராஜசுந்தரம் ஆகிய எனது தே, அ, அட்டை 757440385V வி. அ. அட்டை 091001390 இரண்டும் Record Book (யாழ். பல்கலைக் கழகம்) குறிப்புப்புத்தகம் என்பனவும் 4.12.98 பத்திரகாளி கோயிலடி திருநெல்வேலியில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தாஸ் கடை, திருநெல்வேலியில் (கலாசாலை வீதி) ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும்.

(61133)

## விற்பனைக்கு

பாவித்த வீட்டு ஷோகேஸ், ஹோல் செற்றி (Box Type), சிசில் குளிர்சாதனப்பெட்டி, சாப்பாட்டு மேசைகள் முதலான பொருள்கள்விற்பனைக்குண்டு. தொடர்பு: 28, குமாரசாமி வீதி (பல்கலைக் கழகம் முன்பாக), கந்தர் மடம், யாழ்ப்பாணம்.

(61147)

## SPOKEN ENGLISH

சிறு குறாப்பாக, சுலபமாக இலக்கணம் இன்றி குறுகிய காலத்தில் ஆங்கிலத்தில் கதைக்கப் பயில ஆசிரியர் ந. விக்னேஸ்வரன் ஆச்சாரி Cer/Dip in Science (London) 426 (302), காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.

(61116)

## திருத்துதல்

உங்களுடையசகலவிதமான தட்டச்சு இயந்திரங்களையும் சிறந்த முறையில் திருத்திப் பெற்றுக்கொள்ள நாடுங்கள்: ஏ. எஸ். செந்தூரன், இராமலிங்கம் வீதி, சாவகச்சேரி (A.G.A அலுவலக அண்மையில்).

(61084)

## ஆங்கிலம் விசேடமாக

G. A. Q. (Spoken English) ஆண்டு 6இல் இருந்து 11வரை விசேடமாகக் கற்பிக்கப்படும். ஆசிரியர் 85, சிவன் கோயிலடி, சிவன் கோயில் மேற்கு வீதி, திருநெல்வேலி.

(61006)

# யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம்

## வரவு செலவுத் திட்டம் - 1999

1999 ஆம் ஆண்டிற்குக் கிடைக்கக் கூடிய மாநகர வருமான மதிப்பீட்டையும், உத்தேச செலவீன விவரங்களையும் உள்ளடக்கிய யாழ்ப்பாண மாநகராட்சி மன்றத்தின் வரவு செலவுத் திட்டம் 1998 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 7 ஆம் திகதி தொடக்கம் ஏழு நாள்களுக்கு யாழ்ப்பாண மாநகராட்சி மன்ற அலுவலகத்தில் பொது மக்கள் பார்வைக்கு வைக்கப்படுமென மாநகராட்சி மன்றங்கள் கட்டளைச் சட்டத்தின் (அத்தி. 252) (212) (பி) பிரிவின் பிரகாரம் இத்தால் அறிவித்தல் தரப்படுகின்றது.

மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

மாநகரசபை அலுவலகம்,
யாழ்ப்பாணம்.

(சி/5732)

# 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
07 — 03 — 1949



மறைவு
09 — 12 — 1996

## தம்பிராசா தர்மலிங்கம்

அன்பு அப்பா இரண்டு ஆண்டுகள் சென்றென்ன ஈராயிரம் ஆண்டுகள் சென்றாலும் உங்கள் நினைவு எங்களை விட்டு என்றும் அகலாது.

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளை.

பாலாவி தெற்கு,
கொடிகாமம்.

(சி/5727)

# GTZ Jaffna Rehabilitation Project

## கூறுவிலை கோரல்

பாடசாலைகள் சுகாதார வசதிகள் புனரமைப்பு வேலைத்திட்டத்திற்கான பின்வரும் பொருள்கள் அந்தந்தப் பகுதி வர்த்தகர்களிடம் கொள்வனவு செய்யும் பொருட்டு அவ்விடங்களில் செயற்படும் வர்த்தகர்களிடமிருந்து கூறு விலைகள் கோரப்படுகின்றன.

### தேவைப்படும் பொருள்கள்

01. கட்டடவேலைக்கான மணல்
02. கிறசர் கல்
03. கண்டகல்
04. பனைமரம்
05. இரும்புக் கம்பி வகைகள்
06. பிணைச்சல்கள்
07. திறாங்குகள்
08. பூட்டுகள்
09. ஆணிவகைகள்
10. கழிவறை உபகரணங்கள்
11. குழாய் நீர்த்தொட்டி (WASH BASIN)
12. நீர் வழங்கல் குழாய்கள் உபகரணங்கள்
13. பெயின்ற் வகைகள்

### கூறுவிலைகள் கோரப்படும் வர்த்தக மையங்கள்

01. சங்கானை பிரதேசசெயலர் பிரிவு
02. உடுவில் ,, ,,
03. கோப்பாய் ,, ,,
04. சண்டிலிப்பாய் ,, ,,
05. ஊர்காவற்றுறை ,, ,,
06. பருத்தித்துறை பிரதேசசெயலர் பிரிவு
07. கரவெட்டி ,, ,,
08. சாவகச்சேரி ,, ,,
09. யாழ்ப்பாணம் ,, ,,

கூறுவிலைப் படிவங்கள் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள முகவரியில் நேரடியாகவோ தபால் மூலமோ பெற்றுக்கொள்ளலாம்.

கூறுவிலைப் படிவங்கள் முழுமையாக பூர்த்தி செய்யப்பட்டு 1998 டிசெம்பர் 21 ஆம் திகதி நண்பகல் 12-00 மணிக்கு முன்பாக எமது அலுவலகத்தில் கிடைக்கக் கூடியதாக தபாலில் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

கூறுவிலைகளை உள்ளடக்கிய கடித உறையின் இடது மேற்பக்கத்தில் ''கூறு விலைகள்'' எனக்குறிப்பிடப்படுவதோடு பிரதேச செயலர் பிரிவையும் குறிப்பிடுதல் வேண்டும். முழுமையாக பூரணப்படுத்தப்படாதனவும், குறிப்பிட்ட நேரம், திகதிக்கு முன் கிடைக்கப் பெறாதவையும் நிராகரிக்கப்படும்.

திட்ட முகாமையாளர்,
ஜிரிசற் நிறுவனம்

11, கண்டி வீதி,
யாழ்ப்பாணம்.

(சி-5722)

# நாவலர் குருபூசை

மானிப்பாய் இந்து சமய விருத்திச் சங்கம் நடத்தும் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் குருபூசையும், திருமுறைகள் ஓதும் போட்டியில் வெற்றி பெற்றோருக்கான பரிசளிப்பு விழாவும் எதிர்வரும் புதன் கிழமை பிற்பகல் 2-30 மணிக்கு மானிப்பாய் மெமோறியல் ஆங்கில பாடசாலை மண்டபத்தில் வே. சி. கணபதிப்பிள்ளை தலைமையில் நடைபெறவுள்ளது.

முதன்மை விருந்தினராக வலி.தெற்கு பிரதேச செயலர் ஆ. மகாலிங்கம் கலந்து கொள்வார். கௌரவ விருந்தினராக கலாநிதி பண்டிதர் மு. கந்தையா கலந்து கொள்வார். நாவலர் நினைவுப் பேருரையை ஓய்வுபெற்ற அதிபர் திருமதி மங்கையர்க்கரசி திருச்சிற்றம்பலம் நிகழ்த்துவார், (ஐ-135)

# விக்னா கல்வி நிறுவனம்

## புதிய ஆண்டு 1999

ஆண்டு 6 தொடக்கம் O/L வரைக்குமான
புதிய வகுப்புக்கள் ஆரம்பம்
09 - 12 - 98 புதன் மாலை 3.00 மணி

② அனுமதிகளை முன்கூட்டியே பதிவு செய்து கொள்ளுங்கள்

(61151)

# கண்ணீர் அஞ்சலி

திருமதி
## சின்னையா பொன்னு

பளைப் பிரதேச சபை பொது நூல் நிலைய நூலகர்
திருமதி தர்மகுலசிங்கம் அன்னமுத்து
அவர்களின் அன்புத் தாயார்
திருமதி சின்னையா பொன்னு

அவர்களின் மறைவினால் துயருறும் குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஊழியர் நலன்புரிச்சங்கம்,
பச்சிலைப்பள்ளி பிரதேச சபை, பளை.

(சி/5730)

மீண்டும்

# ''நொதேர்ன் சார்ஜெஸ்''

நீடித்த பாவனைக்கு புதிய டகனைட் (DAGENITE) பற்றரிகளை வாங்கவும் சிறந்த முறையில் குறைந்த கட்டணத்தில் மின்சாரம் மூலம்

சார்ஜ் CHARGING
செய்வதற்கும்

## நொதேண் சார்ஜெஸ்

54, மணிக்கூட்டு கோபுர வீதி,
(வெலிங்டன் சந்திக்கு அருகில்)
யாழ்ப்பாணம்.

(61149)

# சிவநெறி கல்வி நிலையம்

(ஸ்ரான்லிக் கல்லூரிக்கு அருகில்)

## 1999 ஆம் ஆண்டுக்கான புதிய வகுப்புக்கள்

ஆரம்பம்: 09 - 12 - 98
புதன் பி. ப. 3-00 மணி

ஆண்டு 3 முதல் 11 வரை

| | |
|---|---|
| கணிதம் | — பா. கிருபாகரன் |
| விஞ்ஞானம் | — I. தயாபரன் |
| தமிழ் | — திருஞானம் |
| ஆங்கிலம் | — K. சுப்பிரமணியம் / S. கிருபாகரன் |
| சமூகக்கல்வி | — E. கந்தசாமி |
| வர்த்தகம் | — B. சண் / S. அகிலன் |
| ஆங்கில இலக்கியம் | — K. சுப்பிரமணியம் |

★ உங்கள் பிள்ளைகளின் எதிர்காலத்தைப் பற்றி சிந்திக்கவேண்டிய நேரம் இது.
★ ஒவ்வொரு வகுப்பிலும் 25 மாணவர்களுக்கு மட்டும் அனுமதி வழங்கப்படும்.
★ வாரத்தில் 5 கணித, விஞ்ஞான வகுப்புக்கள்.
★ கணித பாடத்தில் குறைவாக உள்ள மாணவர்களுக்கான அடிப்படைக் கணிதபாட வகுப்புக்கள்.

நிர்வாகி

(சி/5729)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போலி டாக்டர்களைப் பிடிக்க

# ஜனவரி முதல் நாடெங்கும் தேடுதல்

நாட்டிலுள்ள பத்தாயிரத்துக்கும் அதிகமான போலி டாக்டர்களைக் கண்டுபிடிக்க ஜனவரி முதலாந்திகதி முதல் தேடுதல் நடவடிக்கைகள் முடுக்கி விடப்படுமென சுகாதார அமைச்சர் நிமல்சிறிபால டி சில்வா தெரிவித்தார்.

பட்டதாரி டாக்டர்களென்றும், பதிவு செய்த மற்றும் உதவி மருத்துவர்களென்றும் கூறி மருந்தகங்களை நிறுவி தனிப்பட்ட சேவையினை நடத்தி வரும் போலி டாக்டர்கள் பத்தாயிரத்துக்கும் அதிகமானோர் இருப்பதாக மதிப்பீடுகள் தெரிவிக்கின்றன.

இவர்களில் பலர் தேசிய வைத்தியப்பரீட்சையில் சித்தியடைந்த பின், மேற்கத்திய மருத்துவ டாக்டர்களாகத் தம்மை இனங்காட்டி மருத்துவ சேவையினை வழங்கி வருகின்றனர். இது அடிக்கடி பல்வேறு நோய்கள் பரவுவதற்குக் காரணமாயமைந்துள்ளதும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இப்போலி டாக்டர்களைக் கண்டுபிடித்து அவர்களுக்கு எதிராகச் சட்டநடவடிக்கை எடுக்க விசேட செயலணிக் குழுவொன்று நியமிக்கப்பட்டிருப்பதாகவும் சுகாதார அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இச் செயலணிக்குழு எதிர்வரும் ஜனவரி முதலாம் திகதி முதல் நாடு முழுவதும் அதன் தேடுதல் நடவடிக்கைகளை ஆரம்பிக்குமெனத் தெரிவித்த அமைச்சர் இந்த வேலைத்திட்டத்துக்கு அரசசார்பற்ற நிறுவனங்களும், தனியார் அமைப்புகளும் உதவவேண்டுமென்றும் கேட்டுள்ளார்.

போலி டாக்டர்களுக்குத் தண்டனை வழங்கும் பொருட்டு தற்போதிருந்த சட்டங்களில் மாற்றம் கொண்டு வரப்பட்டிருப்பதாகவும் புதிய சட்டத்தின்படி போலி டாக்டரொருவர் கண்டு பிடிக்கப்பட்டவுடன் 50 ஆயிரம் ரூபா தண்டப் பணம் அறவிடப்படுவதுடன் ஆறு மாத சிறைத்தண்டனையும் விதிக்கப்படுமென்றும் அவர் கூறினார்.

(ஐ-10)

## நாவலர் குரு பூசை

யாழ்ப்பாணம், டிசெ. 7

யாழ். சைவ பரிபாலன சபை நடத்தும் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரின் 119 ஆவது குருபூசைத் தினவிழா நாளை மறுதினம் புதன்கிழமை காலை 9 மணிக்கு நீராவியடி நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

சைவ பரிபாலன சபைத் தலைவர் நா. சோமசுந்தரம் தலைமையில் இடம்பெறவுள்ள மேற்படி நிகழ்வில் யாழ். மேலதிக அரசாங்க அதிபர் து. வைத்திலிங்கம் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

விசேட நிகழ்ச்சிகளாக திருமுறை ஓதல், புராண படனம் மற்றும் மாணவர்களின் பேச்சுக்கள் என்பன இடம்பெறும்.

நாவலர்குருபூசைதினத்தை முன்னிட்டு பாடசாலை மாணவர்களிடையே நடத்தப்பட்ட பேச்சுப்போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில்களை பிரதம விருந்தினர் வழங்குவார்.

(இ-7)

## நெடுந்தீவுக் கரையோரம் பனை விதை நடுகை

நெடுந்திவு, டிசெ. 7

நெடுந்தீவு தெற்கு கடற்கரையை அண்மித்த பகுதிகளில் பனம் விதைகள் நடப்பட்டு வருகின்றன.

பனை அபிவிருத்திச் சபையின் அனுசரணையுடன் நெடுந்தீவு பனை அபிவிருத்திச் சங்கம், நெடுந்தீவு மரம் நாட்டு இயக்கம் என்பவை இப்பணியில் ஈடுபட்டுள்ளன.

இந்த வருடம் பத்தாயிரம் பனம் விதைகள் நடப்பட வுள்ளதாக நெடுந்திவு பனை அபிவிருத்திச் சங்கத் தலைவர் திருமதி இ. சுந்தரம்பிள்ளை தெரிவித்தார்

(ஐ-111)

### கமநல நிலையத்துக்கு

## 13 உழவு இயந்திரங்கள் கொள்வனவு செய்யப்படும்

யாழ்ப்பாணம், டிசெ 7

'சீடா' திட்டத்தின் கீழ் 13 இரண்டு சில்லு உழவு இயந்திரங்களைக் கொள்வனவு செய்ய கமநல சேவை நிலையம் ஏற்பாடு செய்துள்ளது.

கடந்த ஒக்ரோபரில் உழவு இயந்திரங்கள் கொள்வனவுக்கான கேள்விப் பத்திரங்கள் மேற்படி நிலையத்தினால் கோரப்பட்டிருந்தன.

இதே வேளை—

உலக உணவுத் திட்டத்தின் கீழ் 39 வேலைத் திட்டங்கள் கமநல சேவை நிலையத்தினால் நிறைவேற்றப்பட்டுள்ளதாக கமநல சேவை நிலைய வட்டாரங்கள் தெரிவித்தன.

(ஐ-5)

## கிறிஸ்மஸ் ஒளிவிழா

தென்மராட்சி, டிசெ. 7

கிளாலி றோமன் கத்தோலிக்க பாடசாலை மாணவர்களின் கிறிஸ்மஸ் ஒளிவிழா எதிர்வரும் வியாழக்கிழமை அதிபர் ஆ. முத்தையா தலைமையில் பாடசாலை மண்டபத்தில் நடைபெறும்.

விழாவுக்கு விருந்தினர்களாக மிருசுவில் பங்குத் தந்தை அருள்திரு. எரிக் றொஷான் அடிகளும், உதவிப் பங்குத்தந்தை அருள்திரு. யூட் கமலதாஸ் அடிகளும் பளை கோட்டக் கல்வி அலுவலர் அ. கயிலாயபிள்ளையும் கலந்து கொள்வர்.

(ஐ-117)

## தெல்லிப்பழைஆஸ்பத்திரி; மாபெரும் சிரமதானப்பணி

யாழ்ப்பாணம், டிசெ. 7

தெல்லிப்பழை அரசினர் ஆஸ்பத்திரியின் வசதிகளை அதிகரிக்க 513 ஆவது படையினர் பல உதவிகளைச் செய்து வருகின்றனர்.

இதன் ஒரு கட்டமாக இம்மாதம் இரண்டாம் திகதி படையினரும் பொதுமக்களும் சேர்ந்து மாபெரும் சிரமதானம் செய்தனர். வைத்தியசாலையும் அதன் சுற்றாடலும் முற்றாகத் துப்புரவு செய்யப்பட்டன.

இந்தச் சிரமதான நிகழ்வு குறித்து 513 ஆவது படையினர் வெளியிட்ட செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது—

இந்த சிரமதானப் பணியில் ஈடுபட்டவர்களுக்கு சிற்றுண்டி வகைகளை தெல்லிப்பழை ப.நோ.கூ. சங்கம் வழங்கியது. 500 உணவுப் பார்சல்களை 11 ஆவது சிங்கரெஜிமென்ட் அன்பளிப்பாக வழங்கியது.

அன்றைய தினம் நாட்டில் அமைதியும் சமாதானமும் வேண்டி தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலயத்தில் விசேட பூசை வழிபாடுகள் நடைபெற்றன. இந்த நிகழ்வில் 513 ஆவது படையணியின் கட்டளை அதிகாரியான பிரிகேடியர் உதெனி முனசிங்க கலந்து கொண்டார். தெல்லிப்பழை ஆஸ்பத்திரிக்கு 6 மின் விசிறிகளை அவர் அன்பளிப்புச் செய்தார்.

இந்த நிகழ்வில் உரையாற்றுகையில்பிரிகேடியர் உதெனி முனசிங்க பின்வருமாறு குறிப்பிட்டார்.

மக்களுக்கு பாதுகாப்பு அளிப்பது மட்டுல்ல அவர்களுக்கு உதவுவதும் பாதுகாப்புப் படையினரான எமது கடமையாகும். வீதி அபிவிருத்தி வேலைகள், மின்சாரம், போக்குவரத்து, கல்வி, விவசாயம் மற்றும் வேலைபற்ற இளைஞர் யுவதிகளுக்கு சுயதொழில் வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுப்பது ஆகிய துறைகளில் எம்மால் முடிந்தளவு உதவிகளை நாம் செய்து வருகின்றோம். உள்ளகக் கட்டமைப்புகளை அபிவிருத்தி செய்வதன் மூலம் மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த உதவுவதும் பாதுகாப்புப் படையினரின் பணியாகும் — என்று தெரிவித்தார்.

தெல்லிப்பழை ஆஸ்பத்திரியில் இடம்பெற்ற இந்த நிகழ்வுகளுக்கு முன்னதாக 11 ஆவது சிங்கரெஜிமென்ட் 15 மெத்தைகளை ஆஸ்பத்திரிக்கு அன்பளிப்பாக வழங்கி இருந்தது.

இதேவேளை—

11 ஆவது சிங்கரெஜிமென்ட் வேலையற்ற 25 பெண்களுக்கு சுயதொழில் முயற்சி ஊக்குவிப்பாக 5 தையல் இயந்திரங்களை சுன்னாகம் லயன்ஸ் கழகத்துக்கு வழங்கியுள்ளது-

இப்படி அந்தச் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ-3.6)

## 3 ஆம் வருட சிரார்த்த தினம்



பிரபல வர்த்தகர்

**M.S. கந்தையா**

தோற்றம் **10—03—1936**

மறைவு **10—12—95**

திதி: 07-12-1998

வரணி ஞானி பரம்பரை கரம்பைக்குறிச்சி
ஸ்ரீமான் சி. கந்தையா

அவர்களின் நினைவு என்றும் உள்ளது.
சீராளன் சின்னையா பெற்ற மகன் கந்தையா
பேராளன் பெட்புடையோன் பெருமையுளான்-ஏரான்
சதுர்த்தியில் சார்ந்தான் சகமதனை நீத்தே!
அதுகதியே யப்பனடியே!

**மனைவி:-** சின்னாச்சிப்பிள்ளை.
**மக்கள்:** ஜெகநாதன், ஜெயராணி, ஜெயச்சந்திரன், ஜெயகலாதேவி, ஜெயமோகன்.
**மருமக்கள்:-** விக்கினேஸ்வரி, விமலேஸ்வரி, சற்குணநாதன்.
**பேரப்பிள்ளைகள்:-** அபிராமி, அர்ச்சுதன், அர்ச்சகா, மதுசூதனன்.

தகவல்:
ஜெயமோகன் (மகன்)

குருக்கள் குடியிருப்பு,
வரணி.

(61137)

## கேள்வி அறிவித்தல்

### சாவகச்சேரி பிரதேசசபை - கொடிகாமம்

### கொடிகாமம் நவீன மரக்கறிச்சந்தை அமைத்தல்

கீழ்க்குறிப்பிடப்படும் வேலைக்கான கேள்விகள் சாவகச்சேரி பிரதேச சபை செயலாளரால் 1998 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 21 - 12 - 98 ஆம் திகதி பகல் 12-00 மணிவரை ஏற்றுக்கொள்ளப்பட்டு பிற்பகல் 2-00 மணிக்கு கேள்விச்சபையால் பரிசீலனைக்கு எடுக்கப்படும். அச்சமயம் கேள்விக்காரர் அல்லது அவரால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு பிரதிநிதி சமுகம் அளிக்கலாம்.

பதிவு செய்யப்பட்ட தகுதி உடைய அங்கீகரிக்கப்பட்ட ஒப்பந்தகாரர்களும் நிர்மாணப் பயிற்சி நிறுவனத்தில் (இக்ராட்) கட்டடம் நிர்மாணிப்பதற்கான தரம் 7 (ஏழு) இலும் அல்லது அதற்குமேல் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தகாரர்களும் கேள்விப்பத்திரம் பெற்றுக்கொள்வதற்குத் தகுதியுடையவர்களாவர்.

கேள்விப்பத்திரங்களைப் பெறுவதற்குமுன் இற்றைவரை செய்யப்பட்ட வேலைகளின் விவரங்கள் அடங்கிய பதிவுப்புத்தகத்தினை கேள்விக்காரர் சமர்ப்பித்தல் வேண்டும்.

கேள்விப்பத்திரங்களை சாவகச்சேரி பிரதேச சபையின் தலைமைப் பணிமனையில் 1998 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 07 ஆம திகதி முதல் டிசெம்பர் மாதம் 18 ஆம் திகதி பகல் 12-00 மணிவரை கீழ்க்குறிப்பிடப்படும் அட்டவணைப் பிரகாரம் கேள்விப்பத்திரக் கட்டணத்தையும், கேள்விவைப்புப் பணத்தையும் செலுத்துவதன் பேரில் பெற்றுக்கொள்ளலாம்.

கேள்விகளை ஏற்கும் அல்லது நிராகரிக்கும் உரிமை கேள்விச்சபைக்கு உண்டு. மேலதிக விவரங்களை சாவகச்சேரிப் பிரதேச சபையின் தலைமைப் பணிமனையில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

| வேலை விவரம் | மீளளிக்கப்படாத கேள்விப்பத்திரப் பணம் | மீளளிக்கப்படும் வைப்புப்பணம் |
|---|---|---|
| கொடிகாமம் நவீன மரக்கறிச்சந்தை அமைத்தல் | 500.00 | 25,000.00 (இருபத்தையாயிரம் மட்டும்) |

**வே. அருணந்தி**
**செயலாளர்**

சாவகச்சேரி பிரதேச சபை,
கொடிகாமம்.
04-12-1998

(சி/5726)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்,

வலி.வடக்குப் பிரிவு. (தெல்லிப்பழை)

ஆங்கில தட்டெழுத்துச் சுருக்கெழுத்துப்
**போதனாசிரியர் பதவி**

மேற்படி பதவிக்காக ஆங்கில தட்டச்சு சுருக்கெழுத்துப் பயிற்சி பெற்றவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. தகைமை உள்ளவர்கள் எதிர்வரும் **98—12—15** -க்கு முன்னதாகத் தமது விண்ணப்பங்களை ‘செயலாளர், இ. செ. சங்கம், வலி. வடக்குப் பிரிவு, துர்க்காபுரம், தெல்லிப்பழை’ என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

செயலாளர்,
இ. செ. சங்கம்,
வலி. வடக்குப் பிரிவு.

[C/5720]

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை அதிபர்
திரு. வே. ஞானகாந்தன்
அவர்களின் பாசமிகு தந்தையார்

### பொன்னர் வேலாயுதபிள்ளை

அவர்கள் இறைபதம் எய்தியதையிட்டு துயருறும் குடும்பத்தினர் அனைவருக்கும் எமது கல்விச் சமூகம் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன், அவரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றது.

ஆசிரியர்கள், மாணவர்கள்,
ஊழியர்கள்,
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,
பழைய மாணவர் சங்கம்.

யா/யாழ். இந்து ஆரம்ப பாடசாலை,
யாழ்ப்பாணம். (சி/5727)

## ஒளிவிழா

தென்மராட்சி, டிசெ. 7

பளை மத்திய கல்லூரி மாணவர்களின் ஒளிவிழா நிகழ்வுகள் எதிர்வரும் புதன் கிழமை கல்லூரி மண்டபத்தில் அதிபர் க. குணபாலசிங்கம் தலைமையில் நடைபெறும். (ஐ-117)

## கூட்டுறவுச் சங்கக்கிளை திறப்பு

வலிகாமம் தெற்கு, டிசெ. 7

அகதிகளுக்கான ஐ. நா. தூதரகத்தின் உதவியுடன் ஐந்து இலட்சம் ரூபா செலவில் குப்பிளான் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளை புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளது.

சுன்னாகம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கீழ் உள்ள குப்பிளான் கிளையின் (இல. 20) புனரமைக்கப்பட்ட கட்டடத்தை வலிகாமம் தெற்கு பிரதேச செயலர் ஆ. மகாலிங்கம் கடந்த புதன்கிழமை திறந்து வைத்தார்.

சுன்னாகம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் சி. குமரவேல் தலைமையில் நடைபெற்ற இத்திறப்பு விழாவில் முதன்மை விருந்தினராக ஆ. மகாலிங்கம் கலந்து கொண்டார்.

அகதிகளுக்கான ஐ. நா. தூதரக உத்தியோகத்தர் எஸ். பாலகிருஷ்ணன் மற்றும் சுன்னாகம் ப. நோ. கூட்டுறவுச் சங்க பணியாளர்கள், தெல்லிப்பழை, நீர்வேலி ப. நோ. கூ. சங்கங்களின் தலைவர்கள் உட்பட பலர் திறப்பு விழாவில் கலந்து கொண்டனர். (ஐ-152)

## அறியத்தரவும்

கண்டி வீதி அரியாலையிலுள்ள புஸ்பா சினிமாவிலிருந்து 05-12-98 அன்று 6.00 மணி — 7.00 மணி படக்காட்சிக்குப்பின் சினிமாவிற்குச் சொந்தமான **புரொஜெக்டர்** களவாடப்பட்டுவிட்டது.

அதன் இலக்கம் Model - P. L. C. SANYO 400 P A Serial No. G- 8502657 இதுபற்றிய தகவல் தெரிவிப்பவர்களுக்கு தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

முகவரி: புஸ்பா வீடியோ சென்ரர்
நெடுங்குளம் சந்தி, அரியாலை.

(61148)

## தேவை

HOUSE KEEPER/COOK

வதிவிட பராமரிப்பாளர்/சமையற்காரர்

வெளிநாட்டு நிறுவனம் ஒன்றிற்கு மேற்கத்தைய உணவு வகைகள் தயாரிப்பதிலும், வதிவிடத்தைச் சீராகப் பராமரிப்பதிலும் அனுபவமுள்ள ஆங்கிலம் பேசக்கூடிய ஒரு பெண் சேவையாளர் தேவை.

**தயவு செய்து கீழ்க்காணும் முகவரிக்கு விண்ணப்பிக்கவும்**

விளம்பரதாரர்
மே/பா உதயன் 825,
கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

(சி/ 5721)

## உதயம்

**பொருள்கள் வாடகைக்கு கொடுக்குமிடம்**

பீங்கான், ரம்ளர், ஐஸ்கிறீம் கப்ஸ், கறிவாளிகள், குத்துவிளக்கு, பந்திப்பாய், பிளாஸ்ரிக்பாய்கள், கம்பளம், கிடாரங்கள், சமையற் பாத்திரங்கள், பிளாஸ்ரிக்பைவர்கள், கதிரை, பந்தல் இன்னும் பல... ...

அத்துடன் வெளிநாட்டு, உள்நாட்டு தொலைத் தொடர்புகளை காலை 6 மணி முதல் மாலை 7 மணி வரை உடனுக்குடன் பெற்றுக் கொள்ளலாம், எமது தொலைபேசி இலக்கம்: **2392**

உதயம்,
172, பிரதான வீதி, (மக்கள் வங்கி அருகில்),
யாழ்ப்பாணம்,

(61138)

## நினைவஞ்சலி

31 ஆம் நாள் பதினெட்டாம் மாதம்





அமரர்
**சின்னத்தம்பி சபாரத்தினம்**

மலர்வு 25—07—1922 உதிர்வு 07—11—1998

திருமதி
**சரஸ்வதி சபாரத்தினம்**

மலர்வு 27—02—1931 உதிர்வு 09—05—1997

எங்கள் குடும்பத்துக்கு ஒளியூட்டி எங்களைப் பாசத்துடனும் பண்புடனும் வளர்த்த அன்புத் தெய்வங்களே! எங்கள் உள்ளத்தில் என்றும் ஒளி விளக்காய் ஒளிர்வீர்களாக! உங்கள் ஆத்ம சாந்திக்காக இறைவனை வேண்டுகின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

‘‘ சரஸ்வதி வாசா ’’
82, பலாலி வீதி,
உரும்பிராய் தெற்கு.

## முதல்மதி நினைவஞ்சலி



**திருமதி சலோமைப்பிள்ளை கஸ்பார்**

(ஓய்வு பெற்ற ஆசிரியை)

மண்ணுலகில் 19 - 10 - 1916 விண்ணுலகில் 06 - 11 - 1998

‘‘எனது வார்த்தையைக் கேட்டு என்னை அனுப்பியவரிடத்தில் விசுவாசம் கொள்பவன் முடிவில்லா வாழ்வைக் கொண்டுள்ளான். அவன் தீர்ப்புக்குள்ளாகாமல் சாவிலிருந்து வாழ்வுக்குக் கடந்து சென்று விட்டான்’’

(யோவான் 5:24)

எங்கள் இல்லத் தலைவி திருமதி சலோமைப்பிள்ளை கஸ்பார் அவர்கள் விண்ணுலகையடைந்து ஒரு மதி நிறைவுறும் தினமாகிய 07.12.1998 திங்கள் இன்று காலை 6 30 மணிக்கு யாழ். பேராலயத்தில் அவரின் ஆன்ம சாந்திக்காகத் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

மி. கஸ்பார்
பிள்ளைகள்:
மரியறோஸ் கஸ்பார்,
மாட்டீன் டீபொறஸ்,
மடோனா விக்ரர்.
நிர்மலவாசன்.

21/1, ஈச்சமோட்டை,
யாழ்ப்பாணம்.

(61132)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## மற்றொரு இடம்பெயர்வு

அரசாங்கப் படைகள் வன்னிப் பிரதேசத்தில் புதிதாகத் தொடங்கியுள்ள 'சூரியசக்தி' இராணுவ நடவடிக்கையினால் மீண்டும் ஒரு, மற்றொரு பாரிய மக்கள் இடம்பெயர்வு நிகழ்ந்துள்ளது.

ஒட்டுசுட்டான் பிரதேசத்தைச் சேர்ந்த, அங்கு வசித்த 17,000-க்கும் மேற்பட்ட மக்கள் தமது இருப்பிடங்களைக் கைவிட்டு புதுக்குடியிருப்பு, முள்ளியவளைப் பகுதிகளுக்கு இடம்பெயர்ந்திருக்கின்றனர்.

அடை மழை பெய்யும் இக் காலத்தில் இராணுவ நடவடிக்கை தொடங்கப்பட்டதால் மக்கள் அனுபவிக்கும் கஷ்டங்கள் சொல்லில் அடங்கா. காடார்ந்த வன்னியில் கடும் மழையின் மத்தியில் மக்கள் இடம் பெயர்வதால் உண்டாகக் கூடிய இன்னல்களையும் வேதனையையும் கற்பனை செய்யவே மனம் பதறுகிறது.

தாம் குடியிருந்த இடங்களைவிட்டு வெளியேறிய மக்கள், புதுக்குடியிருப்பு, முள்ளியவளைப் பகுதிகளில் அடிப்படை வசதிகள் எதுவும்இல்லாத நிலையில் கோயில்களிலும் பாடசாலைகளிலும், பொது இடங்களிலும் தஞ்சமடைந்துள்ளனர்.

இடம்பெயர்ந்த மக்களில் பலர் காய்ச்சல், வாந்திபேதி நோய்களால் பாதிப்படைந்துள்ளதாகவும் செய்திகள் வந்துள்ளன. பாதிப்புற்ற மக்களுக்கு உரிய வைத்தியசேவையும் சுகாதார வசதிகளும் இல்லாவிடில் அவர்கள் உயிராபத்தைஎதிர்நோக்குவர்.

இவ்வாறு முறைக்கு முறை, இடம்பெயர்வுகளைத் தோற்றுவித்து, மக்களை மரணமடைய வைப்பது மறைமுகமான இன ஒழிப்பாகவே கருதப்பட வேண்டும். இதனை நிறுத்துவதற்கு போர் முடிவுக்குக் கொண்டு வரப்படுவது மிக மிக அவசியம்.

ஆனால் அரசாங்கம் போரை நிறுத்துவது குறித்துச் சிறிதளவேனும் கருத்திற் கொள்வதாக இல்லை. போரின் ஊடாகச் சமாதானம் என்ற அர்த்தமற்ற ''சித்தாந்தத்தை'' அது கைவிடும் வரை, போரை நிறுத்துவது குறித்து சிந்திக்காது என்பது நிச்சயம்.

போர் தமிழ் மக்களை மட்டும் கொல்லவில்லை. சிங்கள இளைஞர்களையும் பலி கொள்கிறது. இருதரப்புகளிலும் அநியாயமாக உயிர்கள் இழக்கப்படுகின்றன.

போர்க்களத்தில் காயமடைந்ததால் ஊனமுற்ற படையினர் — ஊனமுற்றோர் படைவீரர் சங்கத்தினர் — போர் நிறுத்தப்பட வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்திருக்கின்றனர். அவர்களின் குரலும் அரசின் காதில் விழுந்ததாக இல்லை.

அரசியல் லாபம் தேடுவதற்கான திட்டங்கள், உத்தேசங்கள், நிகழ்ச்சி நிரல்களை, நோக்கங்களை இலக்கு வைத்தே அரசாங்கம் போரைத் தொடர்கிறது.

ஆட்சியை சரிவரக் கொண்டு செலுத்தும் அரசியல் வலு இல்லாத போதே போரின் உதவி நாடப்படுகிறது. பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசின் நிலையும் அதுவே.

# பாடசாலைமட்டக் கணிப்பீட்டு முறை காத்திரமான கல்விப் பயனைத் தரும்

## மாணவர் மீது ஆசிரியர், பெற்றோரின் ஈடுபாடு அதிகரிக்க வகை செய்யும்

ஜே. ஏ. தவநாயகம் பி. ஏ.

இலங்கையில் மேற்கொள்ளப்பட்டு வரும் 21 ஆம் நூற்றாண்டை நோக்கிய கல்விச் சீர்திருத்தங்களின் ஓர் அம்சமாக பாடசாலை மட்டக் கணிப்பீட்டுத் திட்டமானது அறிமுகப்படுத்தப்பட்டு, தரம் 6 முதல் தரம் 8 வரையான வகுப்புக்களில் தற்போது அமுலாக்கப்பட்டு வருகின்றது எதிர்வரும் ஆண்டுகளில் ஏனைய வகுப்புக்களுக்கும் இத் திட்டம் நடைமுறைப் படுத்தப்படவுள்ளது.

நீண்டகாலமாக நமது நாட்டில் நடைமுறையிலிருந்து வரும் மதிப்பீட்டுப் பரீட்சைத் திட்டத்துக்குப் பதிலாக மாத்திரமன்றி, கற்றல் கற்பித்தற் செயற்பாட்டிலும் மாற்றங்களை ஏற்படுத்தும் வகையில் இக் கணிப்பீட்டு முறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

அபிவிருத்திக் கல்வியில் முன்னேறிய மேலைநாடுகளில் நடைமுறையிலிருந்து வரும் கணிப்பீட்டு முறையினை எமது நாட்டிற்கேற்ற வகையில் மாற்றங்களைப் புகுத்தி எமது பாடசாலைச் செயற்பாட்டில் பயன்படுத்த முனைவதன் மூலம் கல்வித் திட்டத்தை அபிவிருத்தி நோக்கியதாக முன்னெடுத்துச் செல்ல முயற்சிக்கப்படுவது வரவேற்கத்தக்கதே.

இதுவரை காலமும் தவணைப் பரீட்சைகளாகவும், வருட இறுதிப் பொதுப் பரீட்சைகளாகவும் மேற்கொள்ளப்பட்டு வந்த மதிப்பீட்டுச் செயற்பாடானது இப்புதிய கணிப்பீட்டுத் திட்டத்தில் இல்லாது ஒழிக்கப்படுகின்றது. கற்றல் கற்பித்தலுடன் இணையாத வகையில் தனியாக மேற்கொள்ளப்பட்டு வந்த இம்மதிப்பீட்டு முறைக்குப் பதிலாக, கற்றல் கற்பித்தலுடன் ஒன்றிணைந்த வகையிலானதாக இப் புதிய பாடசாலை மட்டக் கணிப்பீட்டு முறை அமைகின்றது.

கற்றல், கற்பித்தல், மதிப்பீடு ஆகிய மூன்றும் ஒரே நேரத்தில் நிகழும் வகையிலும், ஒன்றோடொன்று இணைந்த வகையிலும், ஒன்றினூடாக ஒன்று நிகழும் வகையிலும் பாடவேளைகளின் போது பாட ஆசிரியராலேயே செயற்படுத்தப்படுகின்ற ஒரு செயற்பாடாக இக் கணிப்பீட்டு முறை அமைந்துள்ளது.

ஒவ்வொரு பாட ஆசிரியரும் தமது மாணவர்களது ஆற்றலுக்கும், திறமைக்கும் ஏற்றவாறு செயற்படவும், அவர்களது திறமையீனங்களையும், பலவீனங்களையும் இனங்கண்டு அவற்றை நிவர்த்தி செய்வதற்கான வழிமுறைகளை மேற்கொள்ளவும் ஏற்றவகையில் இக் கணிப்பீட்டு முறை வடிவமைக்கப்பட்டுள்ளது. அதாவது கற்றலில் ஈடுபட்டுள்ள சகல மாணவர்களையும் தேர்ச்சி மட்டத்துக்கு இழுத்துச் செல்லும் வகையிலான கற்றல் கற்பித்தற் செயற்பாட்டுக்கு இது வழியமைக்கின்றது.

பாட ஆசிரியர் ஏறத்தாழ ஐந்து பாடவேளைகளின் பின் ஒன்று என்ற வகையில், தவணையொன்றுக்கு 8 முதல் 10 தடவைகளில் விசேடமாக அம்மாணவர்களின் ஆற்றல்களுக்கேற்றதாக தாம் அண்மையில் கற்பித்த விடயமொன்று தொடர்பாக அவராலேயே தயாரிக்கப்பட்ட பல்வேறு வகையான கணிப்பீட்டு வழிமுறைகள் மூலம் கணிப்பீட்டினை மேற்கொண்டும், ஒவ்வொரு கணிப்பீட்டின் போதும் பின்தங்கிய மாணவர்களுக்கான பரிகாரக் கற்பித்தல் வழிமுறைகளை உடனுக்குடன் கையாண்டும் மாணவர்களைத் தேர்ச்சி மட்டத்துக்குள் (சிவப்புப் புள்ளி) இட்டுச் செல்ல உதவுவார்.

### சமநிலையான ஆளுமை விருத்திக்கு உதவும்

இவ்வாறு மேற்கொள்ளப்படும் கணிப்பீட்டின் போது மாணவனது அறிவு சார்ந்த, திறன் சார்ந்த, உளப்பாங்கு சார்ந்த, சமூகம் சார்ந்த மற்றும் பல்வேறு ஆளுமைப் பண்புகள் யாவும் அளவிடப்படும் வகையில் பல்வேறு மதிப்பீட்டு உத்திகள் கையாளப்படுகின்றன. அந்த வகையில் இக்கணிப்பீட்டுத் திட்டமானது மாணவனைத் தேர்ச்சி மட்டத்துக்குக் கொண்டு செல்வதுடன் மாத்திரமன்றி சமநிலை ஆளுமை விருத்திக்கும் இட்டுச்செல்கின்றது.

பயன்தரு கற்றல் என்பது நிரந்தரமான பயன்தரு நடத்தை மாற்றத்தினை ஏற்படுத்துவதாக அமைய வேண்டும். மதிப்பீடானது கற்றலூடாகப் பயன்தரு நடத்தை மாற்றம் எந்தளவுக்கு எய்தப்பட்டுள்ளது என்பதை அளவிடுவதாகவும், அதற்குப் பரிகாரம் வழிமுறைகளை எடுத்துக்காட்டுவதாகவும் அமையவேண்டும்.

ஆனால் எமது நாட்டில் இதுவரை நடைமுறையிலிருந்துவரும் மதிப்பீட்டு முறையானது தவணை முழுவதும் அல்லது வருடம் முழுவதும் கற்ற விடயங்களை குறிப்பிட்ட நேரத்தில் எழுத்துப்பரீட்சை மூலமாக அளவிடும் வகையிலேயே அமைந்திருந்தது. கற்றல் மூலம் பெற்ற நடத்தை மாற்றங்கள் பூரணமாக அளவிடப்படாமல் அறிவுசார் திறன்களை அளவிடுவதுடன், மாணவர்களின் ஞாபகத் திறனை பரீட்சிப்பதாகவும் இது அமைந்திருந்தது. இதனால் மாணவர்கள் வெறும் பரீட்சை நோக்கிய கற்றலில் தமது கவனத்தைச் செலுத்தி வந்தனர். சந்திக்குச் சந்தி ''ரியூட்டறி''களின் தோற்றமும் பாடசாலைகளும் பரீட்சைக்குத் தயார்ப்படுத்தும் நிலையங்களாகும் நிலையும் உருவாகியது.

இப்பரீட்சை நோக்கிய கற்றற் போக்கினாலேயாம். மாணவர்கள் மனவெழுச்சிப் பண்புகள் சமநிலை ஆளுமை விருத்தி என்பவற்றில் பின்தங்கியவர்களாகவும், சமூகப் பொருத்தப்பாடற்றவர்களாகவும் கற்றுத் தேர்ந்தார்கள். பல்கலைக்கழகங்களில் ''ராகிங்'' என்ற பெயரில் படுகொலைகள் நடப்பதும், பாடசாலை மாணவர்கள் கத்திக்குத்தில் ஈடுபடுவதும் அகதி முகாம்களிலும் சென்று ''ராகிங்'' செய்வதும் எமது நாட்டின் அண்மைய சம்பவங்கள். இவையாவும் எமது கல்வியமைப்பின் விளைவேயெனின் மிகையாகாது. அது மட்டுமன்றி பொதுப்பரீட்சைகளில் 25 வீதத்துக்கும். குறைவானோரே சித்தி பெறும் நிலையும் தற்போது நிலவுகின்றது.

இத்தகைய நிலைமைகளில் இருந்து மீளும் வகையில் எமது பாடசாலைச் செயற்பாடுகளை மாற்றியமைத்து மாணவனை முழுமை பெற்றவனாக, சமநிலை ஆளுமை உடையவனாக உருவாக்குவதில் இப்புதிய கணிப்பீட்டுத் திட்டம் கவனம் செலுத்துகின்றது.

### இடைவிலகலைத் தடுக்கும்

தற்போது இத்திட்டம் அதன் ஆரம்பக் கட்டத்திலேயே மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள் ஆகிய மூவரிடத்தும் ஓர் உத்வேகத்தை உருவாக்கியுள்ளது. கற்றல் கற்பித்தலுடன் இணைந்து மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டு உடனுக்குடன் முன்னேற்ற அறிக்கை வெளிவிடப்படுவதால் மாணவர்கள் கற்றலில் ஆர்வம் கொள்ளவும். அண்மையில் கற்ற அலகொன்றில் மதிப்பிடப்படுவதால் கற்றற் சுமையின்றி உற்சாகம் கொண்டவர்களாகவும் கற்கின்றனர். அத்துடன் கணிப்பீடானது தொடர்ச்சியாக இடம்பெறுவதால் மாணவர்களின் தொடர்ச்சியான வரவு ஊக்குவிக்கப்படுவதுடன் எமது நாட்டின் முக்கிய பிரச்சினையாகவுள்ள மாணவர் இடைவிலகல் தடுக்கப்படவும் ஏதுவாகின்றது.

மேலும் பிள்ளைகளின் முன்னேற்றம் தொடர்ச்சியாக உடனுடக்குடன் வெளியிடப்படுவதால் பிள்ளைகளின் கற்றல் தொடர்பாகப் பெற்றோர் ஈடுபாடு அதிகரிக்கவும், பாடசாலையுடனான உறவு அதிகரிக்கவும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. அத்துடன் ஆசிரியர்கள் தமது மாணவரைத் தாமே கணிப்பிடுவதன் மூலம் தமது கற்பித்தலை வளப்படுத்தவும் புத்தூக்கம் பெறவும் முடிகின்றது. பின் தங்கிய மாணவரை இனங்காணவும் உடனுக்குடன் பரிகாரம் மேற்கொள்ளவும் சந்தர்ப்பம் கிடைத்துள்ளது. பொதுவாக பொதுப்பரீட்சைக்கு மாணவர்களைத் தயார் செய்வதிலேயே இதுவரை ஆசிரியர்களின் கவனம் இருந்து வந்தது குறிப்பிடத்தக்கது.

பாடசாலை மட்டக் கணிப்பீட்டுத் திட்டமானது ஆசிரியர்களது வேலைப்பளுவை அதிகரித்துள்ளது எனவும் அதனைத் திட்டமிட்டவாறு நடைமுறைப்படுத்துவது சிரமமானது என்ற கருத்தும் நிலவுகின்றது. அத்துடன் கடந்த கால கல்வித் திட்டமாற்றங்களைப் போல் இத் திட்டமும் விரைவில் கைவிடப்பட்டு விடுமென்ற ஓர்எதிர்பார்ப்பும் ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்களிடத்தும் நிலவுகின்றது.

ஆசிரியர்கள் பல்வேறு செயற்பாடுகளை இத்திட்டத்தின் அமுலாக்கத்தில் மேற்கொள்ள வேண்டியிருப்பினும் அவை மிக இலகுவான முறையில் மேற்கொள்ளத்தக்கனவாகவும் கற்பித்தலை இலகு படுத்துவனவாகவும் மாணவர் மைய கற்பித்தலை மேம்படுத்துவனவாகவும் அமைந்துள்ளன எனவேதிட்டமிட்டமுறையில் ஒழுங்குபடுத்தும் போது வேலைப்பளு தோன்ற வாய்ப்பில்லை.

மேலும் எதிர்காலத்தில் இத்திட்டத்தில் எத்தகைய மாற்றங்கள் உட்புகுத்தப்படப்போகின்றன, க.பொ.த. (சா/த) பரீட்சை எவ்வாறு அமையப் போகின்றது என்பன பற்றிய உறுதியான முடிவுகள் இதுவரை அறியப்படாவிட்டாலும், பாடசாலைக் கல்வி முறையில் நவீன மாற்றங்களை வேண்டி நிற்கும் நமது நாட்டிற்கு, பாடசாலை மட்டக் கணிப்பீட்டுத் திட்டமானது காலத்தின் தேவை கருதி மேற்கொள்ளப்பட்ட பயன்தரு நடவடிக்கையென உறுதியாகக் கூறலாம். ★

## நாளை

கார்த்திகை 22

செவ்வாய்க்கிழமை

திதி: பஞ்சமி

பிற்பகல் 2.58வரை.

நட்சத்திரம்: ஆயிலியம்

பின்னிரவு 5.26 வரை

சுபநேரம்: 10.47- 12.17

ராகுகாலம்: 3.17- 4.47

(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

## உதயவாக்கு

அறிவு அன்பாக மலர்ந்து இறைவனை [illegible]

- ஸ்ரீராமானுஜர்.

## சங்கானைப் பகுதியில்

# இறைச்சிக்காக மாடு வெட்டுவது நிறுத்தம்

வலி. தென் மேற்கு, டிசெ. 7

சங்கானைப் பகுதியில் ஆடு, மாடுகளுக்கு கால், வாய் நோய் பரவி வருவதை அடுத்து சங்கானை ஓடக்கரையிலுள்ள கொல்களத்தில் இறைச்சிக்காக கால் நடைகள் வெட்டப்படுவது தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

சங்கானைப் பகுதியிலும், பண்ணாகம், சுழிபுரம், பனிப்புலம் ஆகிய இடங்களிலும் இந்த நோய் பரவி வருவதாகவும், இதனால் இப் பகுதியில் கால் நடைகள் மனித நுகர்வுக்காக வெட்டப் படுவது மறு அறிவித்தல் வரை நிறுத்தி வைக்கப்பட வேண்டும் என்று சண்டிலிப்பாயிலுள்ள சங்கானை கால் நடை வைத்திய அதிகாரி மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்கு அறிவித்துள்ளார்.

இதனை அடுத்து சங்கானையிலுள்ள ஓடக்கரை கொல்களத்தில் இறைச்சிக்காக கால் நடைகள் வெட்டுவது மறு அறிவித்தல் வரை நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

(ஐ-135-185)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேறு நாடுகளுக்குச் செல்வதற்காக
# போலந்தில் தங்கிய 300 தமிழர்கள் கைது

கொழும்பு, டிசெ. 7

ஐரோப்பிய நாடுகளுக்குச் செல்வதற்காக போலந்தில் தங்கி இருந்த 300 இலங்கைத் தமிழர்கள் போலந்துப்பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்கள் அனைவரும் படிப்படியாக இலங்கைக்கு திருப்பியனுப்பப்படவுள்ளனர் என்று அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கனடா, பிரான்ஸ், ஜேர்மனி, சுவிற்சர்லாந்து, நோர்வே ஆகிய நாடுகளுக்குச் செல்லும் நோக்கத்துடன் போலந்தில் தங்கியிருந்த தமிழர்களே கைது செய்யப்பட்டுள்ளனர்.

தற்போது இவர்கள் அனைவரும் விசேட முகாம் ஒன்றில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை—

தம்மை இலங்கைக்குத் திருப்பி அனுப்பக்கூடாது என்று கோரியும் தமக்கு அரசியல் தஞ்சம் தருமாறு கோரியும் இவர்கள் கடந்த ஒரு மாத காலமாக உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டதுடன் தமது உடல் அங்கங்களில் பிளேட் மற்றும் கூரியபொருள்களால் கீறியும், வெட்டியும் இரத்தம் சிந்திப் போராட்டம் நடத்தியதாகவும் கூறப்படுகிறது.

இதனை அடுத்து அரசியல் தஞ்சம் வழங்குவது தொடர்பாக போலந்து அரசாங்கம் ஆராய்ந்தது எனினும் பின்னர் எவருக்கும் அரசியல் தஞ்சம் வழங்க முடியாது என்றும் அவர்களது மனுக்கள் நிராகரிக்கப்பட்டன என்றும்— தெரிவிக்கப்படுகின்றது.

அதேசமயம்—

தடுத்து வைக்கப்பட்டவர்களில் ஒரு தொகுதியினர் கடந்த வாரம் இலங்கைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

ஏனையோரும் படிப்படியாக அனுப்பி வைக்கப்படுவார்கள் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

தற்போது முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களை ஐரோப்பிய நாடுகளைச் சேர்ந்த தூதரகங்களின் அதிகாரிகள் சென்று பார்வையிட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டது.

(ஐ-6-10)

## சர்வதேச தடயவியல் நிபுணர் கொழும்பில்

கொழும்பு, டிசெ. 7

சர்வதேச தடயவியல் நிகழ்ச்சித் திட்டப்பணிப்பாளர் வில்லியம் டி ஹக்லண்ட் இலங்கை வந்துள்ளார். ஆசியா ஃவுண்டேஷன் நிறுவனத்தின் அழைப்பை ஏற்றே அவர் இங்கு வந்துள்ளார்.

கொழும்பு வந்துள்ள இவர் இரகசியப் பொலீஸ் அதிகாரிகள் மற்றும் இலங்கை மனித உரிமை ஆணைக்குழு அதிகாரிகள் ஆகியோரைச் சந்தித்து செம்மணிப் புதைகுழி விவகாரம் தொடர்பாக கலந்துரையாடியதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதே வேளை—

வில்லியம் டி ஹக்லண்ட்டை மனித கௌரவத்துக்கான அமைப்பு அதிகாரிகள் சிலரும் சந்தித்துப் பேசியுள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் கைது செய்யப்பட்டு காணாமல் போனோர் தொடர்பாக தாம் சேகரித்த புள்ளிவிவரங்களை அவர்கள் வில்லியம் டி ஹக்லண்டிடம் வழங்கியதுடன் காணாமற் போனோர் குறித்து வழங்கப்பட்ட தவறான தகவல்கள் குறித்தும் தாம் அவரிடம் விளக்கியதாக மனித கௌரவத்துக்கான அமைப்பின் செயலாளர் மகேஸ்வரி வேலாயுதம் தெரிவித்தார்.

வில்லியம் டி ஹக்லண்ட் றுவாண்டா போன்ற நாடுகளில் புதைகுழிகளைத் தோண்டி ஆராய்வதில் ஈடுபட்ட ஐக்கிய நாடுகள் சபையின் குழுவுக்கு தலைமை வகித்தவர் ஆவார்.

செம்மணிப் புதைகுழிகளைத் தோண்டுவதற்கு ஐ. நா. மனிஉரிமை ஆணைக்குழு அனுமதிக்கப்பட்டால் வில்லியம் டி ஹக்லண்ட் தலைமையிலான தடயவியல் நிகழ்ச்சித் திட்ட நிறுவனமே அந்தப் பணிகளில் ஈடுபடுத்தப்படும் என்று எதிர்பார்க்கப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (ஐ-6-10)

## தாழ்ந்த பிரதேசங்களிலும் வயல்களிலும் வெள்ளம்

அரியாலை, டிசெ. 7

தொடர்ந்து பெய்துவரும் பலத்த மழையினால் யாழ். நகரை அண்டிய தாழ்ந்த பகுதிகளில் வெள்ளம் ஏற்பட்டுள்ளது.

கொழும்புத்துறை துண்டி கரையோரப் பகுதிகளில் வெள்ளம் தேங்கியதால் இப்பகுதியில் வாழும் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

ஈச்சமோட்டை மறவன் குளம், கொழும்புத்துறை இலந்தைக்குளம் போன்றவை நிரம்பி வழிந்து செல்வதால் வீதிகளிலும் வெள்ளம் ஏற்பட்டுள்ளது.

இதேவேளை—

அரியாலைப் பகுதியில் வயல்களில் மழையினால் வெளளம் நிரம்பி வழிகின்றது. (ஐ-17)

## தாய்-சேய் கிளினிக்குகளில் 'திரிபோஷா' விநியோகம்

திருநெல்வேலி, டிசெ. 7

யாழ். சுகாதாரத் திணைக்களத்திற்கு நீண்டகால இடைவெளிக்குப் பின்னர் 'திரிபோக்ஷா' மா கொழும்பிலிருந்து செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் கப்பல் மூலம் கடந்த வாரம் எடுத்து வரப்பட்டுள்ளது.

கடந்த புதன்கிழமையன்று இங்கு வந்து சேர்ந்த இந்த திரிபோஷா மா பைக்கெற்றுக்கள் யாழ். சுகாதார பிராந்தியத்திலுள்ள சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகங்களுக்கு பங்கீடு செய்யப்பட்டு விநியோகம் செய்யப்பட்டு வருகின்றன.

மிகவும் போஷாக்குக் குறைந்த நிலையிலுள்ள கர்ப்பிணித் தாய்மாருக்கும், குழந்தைப் பிள்ளைகளுக்கும் இந்த மா பைக்கெற்றுகள் தாய்-சேய் சிகிச்சை கிளினிக்குகளில் வழங்கப்படுமெனத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-135)

## சமய தீட்சை வழங்கல்

தென்மராட்சி, டிசெ. 7

பளை இரட்டைக்கேணி அம்பாள் ஆலயத்தில் பளைப் பகுதியைச் சேர்ந்த 35 மாணவர்களுக்கு சமயதீட்சை கடந்த வெள்ளிக்கிழமை வழங்கப்பட்டது.

(ஐ- 117)

# தரைவழிப் பாதை திறக்கும் நோக்கத்தில் மாற்றமில்லை

## இராணுவப் பேச்சாளர் தெரிவிப்பு

கொழும்பு, டிசெ. 7

யாழ். குடாநாட்டிற்கான தரை வழிப்பாதையைத்திறப்பதற்காக ஆரம்பிக்கப்பட்ட 'வெற்றி உறுதி' இராணுவ நடவடிக்கை முடிவடைந்தாலும் குடாநாட்டிற்கான தரை வழிப்பாதையைத் திறக்கும் நோக்கத்தில் மாற்றமில்லை.

இவ்வாறு இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் சுனில் தென்னக்கோன் தெரிவித்தார்.

சர்வதேச செய்தி நிறுவனம் ஒன்றுக்கு அளித்த பேட்டியிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

'வெற்றி உறுதி' படை நடவடிக்கை கைவிடப்பட்ட போதும் அதன் நோக்கத்தை அடைவதற்கு படையினர் வேறு வழிகளைக் கையாளுவார்கள். படையினரின்இறுதி இலக்கில் எது வித மாற்றங்களும் இல்லை என்றும் அவர் தெரிவித்தார்.

கடந்த ஒன்றரை வருட காலத்துக்கும் மேலாக நடைபெற்று வந்த 'வெற்றிஉறுதி' இராணுவ நடவடிக்கை நிறுத்தப்பட்டு புதிதாக 'சூரிய சக்தி' என்ற இராணுவ நடவடிக்கை வன்னிப்பகுதியில் ஆரம்பிக்கப்பட்டது தொடர்பாக கருத்து வெளியிடும் போதே இராணுவப் பேச்சாளர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கடந்த 1997 ஆம் ஆண்டு மே மாதம் ஆரம்பிக்கப்பட்ட 'வெற்றி உறுதி' இராணுவ நடவடிக்கை ஓமந்தை. புளியங்குளம், மாங்குளம் ஆகிய பகுதிகளைக் கைப்பற்றுவதை நோக்கமாகக் கொண்டது. அதுபூர்த்தியானதை அடுத்து, புதிய 'சூரிய சக்தி' இராணுவ நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்று பாதுகாப்பு அமைச்சு அறிவித்திருந்தது தெரிந்ததே.

(ஐ-6-10)

## யூரியா விநியோகம்

பளை கமநல கேந்திர நிலையத்தினால் விவசாயிகளுக்கு யூரியா உரம் விநியோகிக்கப்பட்டு வருகிறது.

பாதுகாப்பு அரணுக்கு வெளியே உள்ள விவசாயிகளுக்கு மண் கலப்பு செய்யப்பட்டே யூரியா விநியோகிக்கப்படுகிறது.

அந்தந்தப் பிரிவு கிராம அலுவலரின் சிபார்சுடன் யூரியா விநியோகிக்கப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

(ஐ-117)

## புனரமைப்பு

கரவெட்டி சின்னத்தம்பி ஞாபகார்த்த அரசினர் கிராம வைத்தியசாலை ஒரு இலட்சம் ரூபா செலவில் திருத்தப்பட்டு வருகிறது.

இத் திருத்த வேலைக்கான நிதியை யாழ். பிராந்திய சுகாதாரதிணைக்களம் ஒதுக்கீடு செய்திருந்தது.

(ஐ-173)

## மழையை அடுத்து
# வயல்களில் களைபிடுங்கும் வேலைகள் மும்முரம்

தென்மராட்சி, டிசெ. 7

தென்மராட்சிப் பகுதியில் பெய்துவரும் அடை மழையினால் பல இடங்களில் வெள்ளம் காணப்படுகிறது.

இப் பிரதேச காலபோக நெற்செய்கை வயல்களில் போதியளவு நீர் காணப்படுவதால் நெல் வயல்களில் களை பிடுங்கும் வேலைகள் மும்முரமாக ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

பல இடங்களில் நெற்பயிர்கள் களைகளினால் மூடப்பட்டிருப்பதைக் காணமுடிகிறது. (ஐ-117)

## உள்நாட்டு, வெளிநாட்டு
# தொண்டு நிறுவனங்களின் விவரம் சேகரிப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 7

யாழ் மாவட்டத்திலுள்ள பிரதேச செயலர் மற்றும் உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் இயங்கும் உள்ளூர் மற்றும் வெளியூர் அரச சார்பற்ற நிறுவனங்களின் விவரங்கள் சேகரிக்கப்பட்டு வருகின்றன.

யாழ். மாவட்ட செயலக பிரதி திட்டமிடல் பணிப்பாளரின் பணிப்பின் பேரிலே இந்த விவரங்கள் சேகரிக்கப்பட்டு வருகின்றன.

1995 ஆம் ஆண்டு இடப்பெயர்வுக்குப் பின்னர் யாழ்ப்பாணத்தில் அரச சார்பற்ற நிறுவனங்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

ஐ. நா. உதவி நிறுவனங்கள மற்றும் சர்வதேச நிறுவனங்கள் யாழ்ப்பாணத்தில் தமது அலுவலகங்களை அமைத்து புனர்வாழ்வு, மீள்குடியேற்றம், புனரமைப்புப் பணிகளில் உதவி வருவது தெரிந்ததே.

இதேபோன்று — உள்ளூர் அரச சார்பற்ற நிறுவனங்களும் மேற்குறிப்பிட்ட வேலைத்திட்டங்களில் உதவி வருவது குறிப்பிடத்தக்கது.

இந்த நிறுவனங்களின் செயற்பாடுகள், நோக்கம் பற்றி அறியும் பொருட்டே விவரங்கள் சேகரிக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

(ஐ-5)

## தேசிய பாசறை

திருநெல்வேலி, டிசெ. 7

சென். ஜோன்ஸ் அம்புலன்ஸ் படையின் தேசிய பாசறை நிகழ்வுகள் எதிர்வரும் 26 ஆம் திகதி தொடக்கம் 30 ஆம் திகதி வரை காலையில் நடைபெறவுள்ளன.

யாழ். மாவட்டத்திலிருந்து முதலுதவி, பொதுசேவையில் ஈடுபட்டுள்ள 15 பேர் கொண்ட அணியினர் இதில் கலந்துகொள்ள விருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

(ஐ-135)

## களவாடப்பட்ட பொருள்களைப் படையினர் மீட்டனர்

வலிகாமம் தெற்கு, டிசெ.7

களவாடப்பட்டதாக கூறப்படும் பல பொருள்கள் உடுவில், ஆனைக்கோட்டைப் பகுதிகளில் இருந்து உடுவில் இராணுவத்தினரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

மக்கள் இடம் பெயர்ந்த காலத்தில் களவாடப்பட்டதாகக் கருதப்படும் சைக்கிள்கள், குளிர்சாதனப்பெட்டிகள். தொலைக்காட்சிப்பெட்டிகள், குக்கர், மோட்டர், நீர்இறைக்கும் இயந்திரங்கள், காஸ் சிலிண்டர்கள், பெற்றோமக்ஸ் மற்றும் பல வீட்டுப் பாவனைப் பொருள்கள் ஆகியவையே இராணுவத்தினரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

பொதுமக்கள் செய்த முறைப்பாட்டைத் தொடர்ந்து உடுவில் சிவில் நிர்வாகக் காரியாலய அதிகாரிகள் உடுவில் — மானிப்பாய் வீதியில் மகளிர் கல்லூரிக்கு அருகில் உள்ள ஒரு வீட்டிலும், ஆனைக்கோட்டை கூழாவடி என்ற இடத்தில் உள்ள இரண்டு வீடுகளில் இருந்தும் மேற்படி பொருள்களைக் கைப்பற்றியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பூட்டிய நிலையில் இருந்த அறையினுள்ளும் நில அறையினுள் இருந்தும் இப்பொருள்கள் மீட்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

கைப்பற்றப்பட்டுள்ள பொருள்கள் யாவும் உடுவில் சிவில் நிர்வாகக் காரியாலயத்தில் இனங் காண்பதற்காக மக்கள் பார்வைக்கு வைக்கப்பட்ட பின்னர் சுன்னாகம் பொலீஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

சம்பந்தப்பட்ட வீட்டு உரிமையாளர்கள் மூவர் இராணுவ அதிகாரியின் பணிப்பின் பேரில் சுன்னாகம் பொலீஸில் விசாரணைக்காக ஒப்படைக்கப்பட்டனர்.

(ஐ-152)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலகூடம் அமைப்பு

'யுனிசெவ்' உதவித் திட்டத்தின் கீழ் புன்னாலைக் கட்டுவன் பகுதியில் 50 மலசல கூடங்கள் அமைக்கப் பட்டு வருகின்றன.

புன்னாலைக்கட்டுவன் வடக்கு, ஈவினைப் பகுதிகளிலே இந்த மலசல கூடங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன, (ஐ-5-135)


யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

வெளிவாரிப் பதிவுகள் பரீட்சைகள் அலகு

**வெளிவாரிப் பரீட்சைகள்**

1996/1997

பொதுக்கலைமாணி பகுதி 1

சிறப்புக்கலைமாணி பகுதி 1

வர்த்தகமாணி பகுதி 1

மேற்குறிப்பிட்ட பரீட்சைகள் யாவும் ஜனவரி மாதம் 18 ஆம் திகதி திங்கட்கிழமை (18.1.1999) ஆரம்பமாகவுள்ளன.

விண்ணப்பப் படிவத்தினைப்பெற விரும்புவோர் யாழ். பல்கலைக்கழகத்தில் இயங்கும் மக்கள் வங்கிக் கிளையில் ரூ. 15 இனைச் செலுத்தியமைக்கான பற்றுச் சீட்டினை எமது அலுவலகத்தில் சமர்ப்பித்து விண்ணப்பப்படிவத்தினைப் பெற்றுக்கொள்ளவும்.

வவுனியா வளாகத்தில் பரீட்சை எழுத விரும்புவோர் அங்கு விண்ணப்பப் படிவங்களைப் பெற்று பூர்த்தி செய்து வளாகத்தில் சமர்ப்பிக்கலாம்.

இந்த விண்ணப்பங்கள் யாவும் 23.12.1998 வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

**பதிவாளர்,**
யாழ். பல்கலைக்கழகம்.
(சி/578)1


## செம்மணி புதைகுழி விவகாரம்:

# சட்டமா அதிபரிடம் இருந்து இன்னும் பதில் இல்லை

## ஆணைக்குழு உறுப்பினர் தகவல்

கொழும்பு, டிசெ. 7

செம்மணிப் புதைகுழி விவகாரம் தொடர்பாக மனித உரிமை ஆணைக்குழ சட்டமா அதிபருக்கு எழுதிய கடிதங்களுக்கு அவரிடமிருந்து எந்த விதமான பதிலும் இதுவரை கிடைக்கவில்லை.

இவ்வாறு மனித உரிமை ஆணைக்குழு உறுப்பினர் யூசுப் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

செம்மணிப் புதைகுழிகளைத் தோண்டும் வேலைகளை சட்டமா அதிபரின் ஆலோசனையின் பேரில் பொலீஸாரே மேற்கொள்ள வேண்டும்.

எனவே சட்டமா அதிபர் திணைக்களத்தால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் குறித்து அறியத் தருமாறு கோரி நாம் சட்டமா அதிபருக்கு பல கடிதங்களை அனுப்பியுள்ளோம்.

புதைகுழி விவகாரம் தொடர்பான முதலாவது கடிதத்தை இரண்டு மாதங்களுக்கு முன்னர் அனுப்பி வைத்திருந்தோம். அதற்குப் பதில் கிடைக்காமையால் நாம் இரண்டாவது கடிதத்தையும் அனுப்பி வைத்திருந்தோம். எனினும் அதற்கும் பதில் எதுவும் கிடைக்கவில்லை.

இதனை அடுத்து மூன்றாவது கடிதத்தை கடந்த மாதம் 31 ஆம் திகதி அனுப்பி வைக்துள்ளோம்.

செம்மணிப் புதைகுழிகளை தோண்டுவது தொடர்பாக காலதாமதம் ஆவதற்குக் காரணம் எமது கடிதத்துக்கு பதிலளிக்கப்படாமையே ஆகும். ஆணைக்குழு இந்த விடயத்தில் உரிய நடவடிக்கைகளை எடுத்தே வருகின்றது. ஆனால் கடிதத்துக்குப் பதிலளிக்காமல் தாமதம் காட்டப்படுகின்றது.

இப்படி அவர் மேலும் தெரிவித்தார். (இ-6-10)

## ஆணைக்குழு கைதிகளை பார்வையிடும்

யாழ்ப்பாணம், டிசெ. 7

காங்கேசன்துறை தடுப்பு முகாமில் தடுத்து வைக்கப் பட்டுள்ளவர்களைப் பார்வையிடுவதற்காகத் தேசிய மனித உரிமைகள் ஆணைக்குழு யாழ். அலுவலக அதிகாரிகள் நாளை மறுதினம் அங்கு செல்லவிருக்கின்றனர். (இ-3)

## பேராதனை பல்கலை மாணவர்களுக்கு

கொழும்பு, டிசெ. 7

1998—1999 ஆம் கல்வி ஆண்டுக்கான பேராதனைப் பல்கலைக்கழக பொறியியல் பீடத்துக்கு தெரிவு செய்யப் பட்டுள்ள மாணவர்களுக்கான ஆங்கில மொழிப் பரீட்சை எதிர்வரும் 12 ஆம் திகதி காலை 8-30 மணிக்கு நடைபெறும் என்று அந்தப் பல்கலைக்கழக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (இ-6)

## வாதுவவில் வாகனம் ஏற்றியோர் கவனத்துக்கு

யாழ்ப்பாணம், டிச. 7

பருத்தித்துறை துறைமுகத்தில் பொருள் இறக்கும் பணியில் ஈடுபட்டுள்ள 'வாதுவ' கப்பலில் வாகனங்கள் ஏற்றியவர்களை யாழ். செயலக புனர்வாழ்வுப் பிரிவுடன் உடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

வாகனம் தொடர்பான உரிமையை நிரூபித்து துறைமுகத்தில் இருந்து அவற்றைப் பொறுப்பேற்கவே இக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது என யாழ். அரச அதிபர் தெரிவித்துள்ளார். (இ-3)

# யுத்தத்தை நிறுத்த ஒன்றுபட்டு உழைப்போம்

## ஊனமுற்றோர் கோரிக்கை

கொழும்பு, டிசெ. 7

நாட்டில் பேரழிவை ஏற்படுத்தி வருகின்ற யுத்தத்தை நிறுத்துவதற்கு அனைவரும் ஒன்றுபட்டு உழைக்க வேண்டும்.

ஊனமுற்ற முன்னாள் படைவீரர்கள் சங்கம் மேற்கண்டவாறு கோரியுள்ளது.

சர்வதேச ஊனமுற்றோர் தினமான கடந்த 3 ஆம் திகதி மேற்படி சங்கம் விடுத்துள்ள அறிக்கையில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது:-

கொடூரமான இந்த யுத்தத்தால் பாதுகாப்புப் படையைச் சேர்ந்த பலர்வாழ்க்கை முழுவதும் ஊனமுற்றவர்களாக வாழ நிர்ப்பந்திக்கப் பட்டிருக்கிறார்கள். எனினும் அவர்களுச்கு வேண்டிய தேவைகளைப் பூர்த்தி செய்வதில் போதிய அக்கறை காட்டப்படுவதில்லை.

ஆயுத வியாபாரிகளினதும் தனிப்பட்ட சிலரின் நலனையும் பூர்த்தி செய்வதற்காக நடைபெறும் யுத்தத்தில் இறந்து கொண்டிருப்பவர்கள் வறிய மக்களின் குழந்தைகளே.

மிக மோசமான விளைவுகளையே தொடர்ந்து ஏற்படுத்திக் கொண்டிருக்கும் இந்த யுத்தத்தினை நிறுத்தி அப்பாவி இளைஞர்களது உயிர்களைப் பாதுகாக்க நடவடிக்கை எடுக்க சகல அரசியல் கட்சிகளும் சமூக ஸ்தாபனங்களும் ஒன்றுபட வேண்டும் — என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-10-6)

## சாரதாதேவியின் ஜெயந்தி விழா

யாழ்ப்பாணம், டிசெ. 7

தூய அன்னை ஸ்ரீ சாரதா தேவியின் ஜெயந்தி விழா எதிர்வரும் வியாழக்கிழமை திருநெல்வேலி இராம கிருஷ்ணாலயத்தில் அனுஷ்டிக்கப்படவுள்ளது.

அன்றைய தினம் அதிகாலை 5-00 மணிக்கு ஆரத்தியுடன் ஆரம்பமாகும் நிகழ்வுகள் மாலை 4-30 மணி வரை தொடர்ந்து நடைபெறும். (இ-6)


மங்களகரமான

★ திறப்பு விழா ★

இன்று திங்கட்கிழமை (07-12-1998)
பகல் 12.00 மணிக்கு வரும்
சுபமுகூர்த்த வேளையில்

**நகுலேஸ்வரி அரைக்கும் ஆலை**

அம்பன் குடத்தனை

திறந்து வைக்கப்பட உள்ளது,
மக்களின் மனங்களில் நிறைவான சேவையை வழங்கிய நாம் மூன்று ஆண்டுகளின் பின்னர் மீண்டும் மக்களின் தேவைகளை நிறைவுசெய்ய திடசங்கற்பம் பூண்டுள்ளோம்.

**அன்பர்கள், ஆதரவாளர்கள், வாடிக்கையாளர்களின் மகிழ்ச்சியே எமது திருப்தி**

நகுலேஸ்வரி அரைக்கும் ஆலை
அம்பன் குடத்தனை.

(சி/5734)



உ

யா / புன்னாலைக்கட்டுவன் மகாவித்தியாலயம்

சுன்னாகம்

**பாடசாலைத் திறப்பு விழா**

காலம்: இன்று (07-12-1998) திங்கட்கிழமை காலை 9-30 மணி

இடம்: பாடசாலை மண்டபம்

**தலைவர்: திரு. ந. குணரத்தினம் அவர்கள் (அதிபர்)**

**பிரதம விருந்தினர்: திரு. அ. தற்பரானந்தன் அவர்கள்**
(பிரதிக்கல்விப் பணிப்பாளர், உடுவில்)

**ஆசியுரை: சிவஸ்ரீ தி. கெங்காதரக் குருக்கள்**

**சிறப்பு விருந்தினர்: திரு. T. V. கிருஷ்ணசாமி அவர்கள்**
(பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், யாழ்ப்பாணம்)

1986 ஆம் ஆண்டில் இருந்து இடம் பெயர்ந்து தற்காலிக வீடுகளில் நடைபெற்ற பாடசாலை தனது சொந்தக் காணியில் 07-12-1998 இல் இன்று புதுப் பொலிவுடன் தனது சேவையை மீண்டும் ஆரம்பிக்கின்றது.

விழாவிற்கு சமுகமளித்துச் சிறப்பிக்கும்படி
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்.

விளம்பர அன்பளிப்பு:

**சண் வியாபார நிலையம்**

(ஐயனார் கோயிலடி)

புன்னாலைக்கட்டுவன் வடக்கு, சுன்னாகம்.

(61160)



**31 ஆம் நாள் நினைவு**



திருமதி

**ஜோசப் லூர்துமறிய (மலர்)**

மலர்வு: **02 — 03 — 1939**

உதிர்வு: **08 — 11 — 1998**

அன்பின் திருவுருவே, ஆருயிர் தெய்வமே! பண்பின் சிகரமாய், பாசத்தின் உறைவிடமாய் எம்மை எல்லாம் பேணிப் பாதுகாத்தீர்! உற்ற துணையாய் உடனிருந்து உற்றார், உறவினர்களையெல்லாம் உபசரித்தீர்! வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து காட்டினீர் அம்மா, எம்மை விட்டு அகன்று இன்றுடன் ஒரு மாதம் சென்ற போதும், என்றும் நீங்கள் எம் நெஞ்சங்களில் வாழ்வீர்கள் அம்மா!

உங்கள் பிரிவால் துயருறும்

**பிள்ளைகள், மருமகன்,
பேரப்பிள்ளை, சகோதரர்கள்,
மைத்துனர்கள், பெறாமக்கள்,
மருமக்கள், உறவினர், நண்பர்கள்.**

இல. 99, சப்பல் வீதி,
யாழ்ப்பாணம்.

(61158)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தபால் ஊழியருக்கு ஜனவரி முதல் 30 சதவீத சம்பள அதிகரிப்பு

கொழும்பு, டிசெ. 7

ஜனவரி மாதம் முதல் தபால் திணைக்களம் கூட்டுத்தாபனமாவதையடுத்துதபால் ஊழியர்களுக்கு 30 சதவீத சம்பள அதிகரிப்பு வழங்கப்படவிருக்கிறது எனத் தபால் தொலைத் தொடர்புகள், வெகுஜனத் தொடர்புப் பிரதி அமைச்சர் எம். எல். ஏ. எம். ஹிஸ்புல்லா தெரிவித்தார்.

காத்தான்குடி முகவர் தபால் நிலையமொன்றைத் திறந்து வைத்து உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

தபால் திணைக்களம் கூட்டுத்தாபனமாவதால் ஊழியர்களின் சலுகைகள், வசதிகள் அதிகரிக்குமே தவிர குறையப் போவதில்லை. சலுகைகள் குறைக்கப்பட்டுவிடும் என ஊழியர்கள் அச்சமுறத் தேவையில்லை. — என்றும் அவர் தெரிவித்தார்.

(ஐ-10)

# துப்பாக்கி சன்னம் பாய்ந்து இளம் பெண் காயம்

## மருதங்கேணியில் சம்பவம்

தென்மராட்சி, டிசெ. 7

வீட்டில் வேலை செய்துகொண்டிருந்த இளம் பெண் ஒருவர் காலில் துப்பாக்கி ரவை பாய்ந்ததால் காயமடைந்து மருதங்கேணி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மு. கலைஅமுதா (23 வயது) என்பவரே காயமடைந்தவர் ஆவார்.

கடந்த புதன்கிழமை வடமராட்சி கிழக்கு மருதங்கேணியில் இச்சம்பவம் இடம்பெற்றது.

அடிக்கடி இப்படி துப்பாக்கி ரவைகள் மருதங்கேணிப் பகுதிக் குடியிருப்புக்களில் வந்து வீழ்வதாகவும் —

துப்பாக்கி வேட்டுச் சத்தம் கேட்க ஆரம்பித்தவுடனேயே மருதங்கேணியில் மக்கள் பதற்றம் அடைவதாகவும் கூறப்படுகின்றது.

துப்பாக்கி வேட்டு காரணமாக கால்நடைகள் கொல்லப்பட்ட சம்பவமும் ஏற்கனவே இடம்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

(இ-117)

## அனுருத்தவுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்)

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் பம்பைமடுக் கிராமத்தில் அனுருத்த ரத்வத்த சென்ற ஹெலிக்கொப்டர் பழுதடைந்து தரையிறக்கப்பட்டதும்—அவர் தமது குழுவினருடன் அங்கிருந்துநடந்து காட்டுவழியாக வவுனியா வந்ததும்—முதலாவது அனுபவம் ஆகும்.

நேற்று நடந்தது இரண்டாவது அனுபவம். (இ-3-9)

## 120 மி. மீ. ஷெல்...

(முதலாம் பக்கத் தொடர்)

யம் அந்த வாகனத்தில் இருந்து 15 மீற்றர் தூரத்தில் முதலாவது ஷெல் வீழ்ந்ததாகவும்—

அதைத் தொடர்ந்து நான்கு அல்லது ஐந்து ஷெல்கள் அப்பகுதியில் வீழ்ந்து வெடித்தன என்றும்— தெரிவிக்கப்பட்டது

திடீரென ஷெல்கள் வந்து வீழ்ந்ததால் அமைச்சரும் ஏனைய உயர் படை அதிகாரிகளும் அவசரமாக அந்தப் பகுதியில் இருந்து வெளியேற வேண்டிய நிலை ஏற்பட்டதாக கொழும்பு செய்தியாளர் ஒருவர் தெரிவித்தார். (இ-3)


# எடிசன் அக்கடமி

தலைமை நிலையம்: 411, K.K.S. றோட், யாழ்ப்பாணம்.

கிளை நிலையம்: 20, வைமன் றோட், நல்லூர்.

## கணிதப் பரீட்சை முடிவுகள் - 05

கூடிய புள்ளிகள் பெற்றோர்:

| | | |
|---|---|---|
| ஆண்டு 11; | S. மோகனஜீவ் | J.H.C. |
| | N. மதுசூதனன் | J.H.C. |
| | N. சங்கர் | J.H C. |
| ஆண்டு 10; | R. துர்க்கா | J.H.L.C. |
| | R. கஜானனன் | J.H.C. |
| | B. பிரசாந்தி | V.G.H.S. |
| ஆண்டு 9: | K. ரிஷிகேசன் | J H.C |
| | G. சுதர்சன் | J.H.C. |
| | N. அகிலன் | J.H.C. |
| ஆண்டு 7; | M. தனுஜா | V.G H.S. |
| | N. நிரஞ்சன் | J.H C. |
| | S. சிவகணேசன் | J.H.C. |
| ஆண்டு 6: | K. தர்சனா | V.G.H.S. |
| | K. குகவதனா | V.G.H.S. |
| | T. நிரஞ்சன் | J.H.C. |

## கணிதம்

திரு B.P. பாஸ்கரன்

புதிய கல்வியாண்டு - 1999

ஆரம்பம்: 09. 12. 1998

புதன்கிழமை பிற்பகல் 4-15 மணி

விவரம் நாளைய உதயனில்.

(61156)


இப் பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிடெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 07-12-1998 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

# அறிவுறுத்தல் கூட்டம்

யாழ்ப்பாணம், டிசெ. 7

எதிர்வரும் 14 ஆம் திகதி ஆரம்பமாகவிருக்கும் ஜி.சீ.ஈ. (சாதாரண தர)பரீட்சையின் மேற்பார்வையாளர்களாகப் பணியாற்றவிருப்பவர்களுக்கான அறிவுறுத்தல் கூட்டம் எதிர்வரும் 11 ஆம் திகதி பிற்பகல் 2 மணிக்கு யாழ். மத்திய கல்லூரியில் நடைபெறும் என்று யாழ்ப்பாண வலயப் பணிப்பாளர் தெரிவித்தார்.

இக் கூட்டம் அன்று காலை 10 மணிக்கு நடைபெறும் என முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது தெரிந்ததே. (இ-3)

## பல்வேறு...

(முதலாம் பக்கத் தொடர்)

மத்தில் ஏற்பட்ட வெடிவிபத்தில் சுதாகரன் (நாகலிங்கம் உதயகுமார்—மட்டக்களப்பு) என்பவரும்—

நேற்று முன்தினம் ஒட்டுசுட்டானில் ஏற்பட்ட மோதலில் அழகையா அல்லது பொபி (ஆறுமுகம் குணதீசன் — யாழ்ப்பாணம்), நாதன் (சுந்தரம் ஜெயரட்ணம் — புதுக்குடியிருப்பு) ஆகியோரும்—

அன்றைய தினம் முல்லைத்தீவில் ஏற்பட்ட வெடிவிபத்தில் சீர்மாறன் (கிருஷ்ணபிள்ளை விமலதாஸ் — திருமலை) என்பவரும் — மரணமானதாக விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர்.

(இ-9)

## அனுருத்த...

(முதலாம் பக்கத் தொடர்)

மூலம் ஒட்டுசுட்டானுக்குச் சென்றார்.

இந்த வாகன அணியில் ரத்வத்தவுடன் இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் றோஹான் தளுவத்த, விமானப் படைத் தளபதி ஏயர் மார்ஷல்ஜயலத்ஜெயக்கொடி கடற்படைத் தளபதி கொமாடர் திசேரா, பொலீஸ் மா அதிபர் லக்கிகொடித்துவக்கு, வன்னிப் படைகளின் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் லயனல் பலகல்ல உட்பட உயர் இராணுவ அதிகாரிகளும் சென்றனர்.

ஒட்டுசுட்டான் பகுதிகளை பார்வையிட்ட இவர்கள் ஒட்டுசுட்டான் தான்தோன்றீஸ்வரர் ஆலயத்தில் தங்கியுள்ள அகதிகளைப் பார்வையிடச் சென்றனர்.

அங்குள்ள அகதிகளுடன் கலந்துரையாடிய அனுருத்த ரத்வத்த அங்கு விசேட பூசைகளில் பங்குபற்றினார்.

அந்தக் கோயில் குருக்கள் ரத்வத்தவுக்குப் பொட்டு வைத்து கையில் நூல் கட்டியதாகத் தெரிவிக்கப்பட்டது.

அதன் பின்னர் அவர் தமது கவச வாகனத்தில் ஏறுவதற்காக சென்ற சமயம் திடீரென அங்கு ஷெல்கள் வந்து வீழ்ந்தன. அப்பொழுதே நான்கு படையினர் கொல்லப்பட 42 பேர் காயமடைந்தனர்.

ஷெல்கள் வந்து வீழ்ந்ததால் பதற்றமடைந்த படை அதிகாரிகள் விரைவாக தமது வாகனங்களில் ஏறி அங்கிருந்து அகன்று சென்றனர்.

அனுருத்தரத்வத்த உடனடியாக அங்கிருந்து ஹெலிமூலம் அநுராதபுரம் சென்று அங்கிருந்து விமானம் மூலம் கொழும்பு திரும்பினார்.

காயமடைந்த படையினர் விரைவாக அநுராதபுரம் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச்செல்லப்பட்டனர்.

இச் சம்பவத்தின் போது ஆலயத்தில் தங்கியிருந்த அகதி ஒருவரும் சிறுகாயத்துக்குள்ளானார் என்று தெரிவிக்கப்பட்டது.

(இ-3-9-21)

# மனித உரிமை தினத்தில் துக்கம் அனுஷ்டிக்க முடிவு

யாழ்ப்பாணம், டிசெ. 7

மனித உரிமைகள் தினமான எதிர் வரும் 10 ஆம் திகதியன்று கறுப்புப் பட்டி அணிந்து துக்கதினம் அனுஷ்டிக்க யாழ். மாவட்டகைதானோர், காணாமல்போனோர் பாதுகாவலர் சங்கம் முடிவு செய்துள்ளது.

கைதானோரின் விடுதலைக்காக அன்றைய தினம் நீராவியடி சிவகுருநாதர் வீதியில் உள்ள மாணிக்கப் பிள்ளையார் ஆலயத்தில் விசேட அபிஷேகமும், கணபதி ஹோமமும் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வில் கைதான தமது பிள்ளைகளின் பெயரும் இடம் பெற வேண்டுமாயின் கைதானவரின் பெயர், அவரது நட்சத்திரம் ஆகியவற்றை தமது அலுவலகத்தில் இன்று சமர்ப்பிக்குமாறு அந்த அமைப்புக் கோரியுள்ளது. (இ-3)

# இணுவில் இளைஞர் இருவர் கொட்டாஞ்சேனையில் கைது

கொழும்பு. டிசெ. 7

கொட்டாஞ்சேனையில் இயங்கும் தொலைத் தொடர்பு முகவர் நிலையத்தில் பணிபுரியும் இரு தமிழ் இளைஞர்கள் கொட்டாஞ்சேனைபொலீஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இணுவிலைச் சேர்ந்த இராசகுமார், ஜெயக்குமார் ஆகிய இரு இளைஞர்களுமே கைது செய்யப்பட்டவர்களாவர்.

இரவுக்கடமையை முடித்து வீட்டுக்கு திரும்பும் வழியில் ஆமர் வீதியில் வைத்தே இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

பொலீஸாரால் விசாரிக்கப்பட்ட பின்னர் இருவரும் கொழும்பு விளக்கமறியல் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

(இ-3-10)

## ஒட்டுசுட்டான்...

(முதலாம் பக்கத் தொடர்)

தெரிவிக்கப்பட்டது.

ஒட்டுசுட்டான் நகரைக் கைப்பற்றியதன் மூலம் 'முல்லைத்தீவுக்'காட்டுக்குள் இருக்கும் விடுதலைப் புலிகளின் பிரதான கட்டளைப் பணியகங்களையும் முகாம்களையும் அடையும் முயற்சியை இலகுவாக்கியுள்ளது என்று இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன. (இ-3-9)

## வல்வை...

(முதலாம் பக்கத் தொடர்)

(26 வயது — வல்வெட்டித்துறை), செல்வராசா சிவகுமார் (24 வயது— வல்வெட்டித்துறை) ஆகியோரே காயமடைந்தவர்களாவர்.

கற்சிலைமடுவில் இருந்து இடம்பெயர்ந்து புதுக்குடியிருப்பு மகா வித்தியாலயத்தில் தங்கியிருந்த இவர்கள் தமது வீட்டில் உள்ள சமையல் பாத்திரங்களை எடுக்கச் சென்ற சமயமே ஷெல் தாக்குதலுக்கு உள்ளானார்கள்.

(இ-3-9)

## புலிகளுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்)

செய்யப்படவுள்ளன என்றும் — தெரிவிக்கப்படுகின்றது.

அதேசமயம் —

வெற்றி உறுதி இராணுவ நடவடிக்கை முடிவடைந்த இடத்தில் இருந்து புதிய சூரிய சக்தி இராணுவ நடவடிக்கை தொடரும் என்றும் —

வவுனியாவுக்கும் யாழ்ப்பாணத்துக்குமான தரைப்பாதையைத் திறக்கும் வரை இராணுவ நடவடிக்கை கைவிடப்படமாட்டாது என்றும்— பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது. (இ-6-10)

# நாய்கள் நஞ்சூட்டி அழிப்பு

வடமராட்சி, டிசெ. 7

பருத்தித்துறை நகரசபைப் பகுதிக்குள் சுமார் 37 கட்டாக்காலி நாய்கள் நஞ்சூட்டி அழிக்கப்பட்டன.

பருத்தித்துறை நகரசபையின் அனுசரணையுடன் பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக சிரேஷ்ட சுகாதார பரிசோதகர் எஸ். செல்வரத்தினம் கட்டாக்காலி நாய்களை நஞ்சூட்டி அழிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டார்.

(ஐ-173)

## ஈ, பி. டி. பி....

(முதலாம் பக்கத் தொடர்)

வந்துள்ளதாக அங்குபொறுப்பாக இருந்த அதிகாரி தெரிவித்ததாக புளொட் வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்த தடை தொடர்பாக கட்சியின் உப-தலைவர் என். மாணிக்கதாசனுக்கு அறிவித்துள்ளதாக புளொட் அமைப்பின் யாழ். மாவட்ட பொறுப்பாளர் செ. கிருபைராஜா தெரிவித்தார்.

''தீவுப்பகுதியில் உள்ள மூன்று பிரதேச சபைகளில் எமது கட்சி சார்பில் உறுப்பினர்கள் உள்ளனர். தேர்தல் காலத்தில் சகல கட்சியினரும் அங்கு சென்று வந்துள்ளனர். தற்போது கொண்டுவரப்பட்டுள்ளதடை நீக்கப்பட வேண்டும். மேல் மட்டத்துக்கு இது தொடர்பாக தெரிவிக்கவுள்ளோம்'' என்று கிருபைராஜா தெரிவித்தார். (இ-3)

## பத்திரிகையாளர்...

(முதலாம் பக்கத் தொடர்)

நேற்றுக்காலை கொழும்பில் இருந்து விமான மூலம் அழைத்துச் செல்லப்பட்டனர்.

அநுராதபுரத்துக்கு அழைத்துச் செல்லப்பட்ட அவர்கள் அங்கிருந்து ஹெலி மூலம் நெடுங்கேணி முகாமுக்கு கூட்டிச் செல்லப்பட்டனர்.

அங்கிருந்து இவர்களை வாகனம் மூலம் ஒட்டுசுட்டானுக்கு அழைத்துச் செல்ல ஏற்பாடாகிய போதும், ஒட்டுசுட்டானில் இடம் பெற்ற சம்பவத்தை அடுத்து அவர்கள் மீண்டும் நேற்று மாலை கொழும்புக்கு அழைத்து வரப்பட்டனர்.

''ஒட்டுசுட்டான் பகுதியில் மோட்டார், ஷெல் சத்தங்கள் கேட்ட வண்ணம் இருந்தன. தொடர்ந்து சண்டை நடைபெறுகிறது என்பதை உணரமுடிந்தது'' என்று பத்திரிகையாளர் குழுவில் சென்ற ஒருவர் தெரிவித்தார். (இ-3)

## குண்டுத் தாக்குதல்களுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்)

வைத்து செய்தியாளர்களிடம் பேசுகையிலேயே அவர் இப்படிக் கூறினார்.

''இதுபோன்ற தாக்குதல்கள், பயங்கரவாதத்தை முறியடித்துச் சமாதானத்தை நிலைநாட்ட வேண்டும் என்ற உறுதிப்பாட்டை மேலும் வலுவடையச் செய்கின்றது.

''போர்முனைக்குச் சென்று படையினரை உற்சாகப் படுத்தும் பணியை நான் கைவிடப்போவதில்லை. அந்தப் பணியைத் தொடர்ந்து மேற்கொள்வேன்''—

இப்படி அவர் மேலும் கூறினார். (இ-3-9)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org